# உதயன்

விலை ரூபா 6.00

சுடர்:15 வள்ளுவர் ஆண்டு 2031 புரட்டாதி 29 ஞாயிற்றுக்கிழமை (15-10-2000) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:255


# வடக்கு - கிழக்கு நிர்வாகத்துக்கு தனி அமைச்சு!

## மாகாண மட்டத்தில் ஆட்சிக்கு அரசியல் தலைமைத்துவமாம்!

கொழும்பு,ஒக்ரோபர்15

**வடக்கு - கிழக்கு மாகாண சபைக்கு அரசியல் தலைமைத்துவம் வழங்கி அந்த மாகாணத்தின் நிர்வாக விடயங்களைக் கவனிப்பதற்காக தனியான அமைச்சு ஒன்றை ஜனாதிபதி அமைக்க உள்ளதாகத் தெரியவருகிறது.**

புதிய அமைச்சரவை தொடர்பான அறிவிப்பு நாளை வெளியிடப்படும் போது இந்த அமைச்சு பற்றிய விவரங்களும் வெளியாகும் என்று எதிர்பார்க்கப்படுவதாக விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

வட அயர்லாந்தில் நிர்வாக விடயங்களைக் கவனிப்பதற்காக

(10ஆம் பக்கம் பார்க்க)

## புதிய சபாநாயகராக லக்ஷ்மன் ஜெயக்கொடி?

கொழும்பு,ஒக்.15

பதினொராவது நாடாளுமன்றத்தின் சபாநாயகராக சிரேஷ்ட அரசியல்வாதியான லக்ஷ்மன் ஜெயக்கொடியை நியமிப்பதற்கு ஆலோசிக்கப்பட்டு வருவதாக ஆளும் கட்சி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

பத்தாவது நாடாளுமன்றத்தில் புத்தசாசன, கலாசார, பண்பாட்டலுவல்கள் அமைச்சராகப் பதவி வகித்த லக்ஷ்மன் ஜெயக்கொடி இம்முறை தேர்தலில் போட்டியிடவில்லை.

(10ஆம் பக்கம் பார்க்க)

## ஜே.வி.பி. தலைவர் நாடு திரும்புவார்

### தேசியப் பட்டியல் மூலம் அவருக்கு எம்.பி. பதவி?

கொழும்பு,ஒக்.15

வெளிநாட்டில் தலைமறைவாக வாழ்ந்து வரும் ஜே.வி.பி. இயக்கத் தலைவர் சோமவன்ச அமரவன்ச விரைவில் நாடு திரும்பி அரசியலில் ஈடுபடுவார் என்று அந்த அமைப்பின் பிரசாரச் செயலாளர் கெல்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசு ஆட்சிக்கு வந்ததும் நாட்டை விட்டுச் சென்ற சோமவன்ச தற்போது வெளிநாடுகளில் தங்கியிருந்து கட்சியின் வெளிநாட்டுப் பிரசாரப் பணியினை மேற்கொண்டு

(10ஆம் பக்கம் பார்க்க)

### வன்னியில் கடும் மழை

## இரணைமடுக் குளத்தில் மிதக்கும் மிதிவெடிகள்!

வவுனியா,ஒக்.15

வன்னிப்பகுதியிலும் பருவமழை ஆரம்பித்துள்ளது. கடந்த சில நாள்களாக அங்கு பலத்த மழை பெய்துவருகிறது.

வன்னிமாவட்டத்தின் தெற்குப் பகுதியில் படையினரால் புதைக்கப்பட்டிருந்த மிதிவெடிகள் பலவும் வெள்ளத்தால் அள்ளுண்டு அடித்துச் செல்லப்பட்டிருப்பதாகவும் -

இவ்வாறு அள்ளிச் செல்லப்பட்ட பெரும் எண்ணிக்கையான மிதிவெடிகள் இரணைமடுக் குளத்தில் மிதந்து கொண்டிருப்பதைக் காணமுடிவதாகவும் வன்னித் தகவல்கள் தெரிவித்தன.

இரணைமடுக் குளத்துக்கு அண்மையில் உள்ள சிறிய நீர்நிலைகளிலும் மிதிவெடிகள் மிதந்து கொண்டிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

வன்னி தெற்குப்பகுதி கடந்த சில ஆண்டுகளாகப் படையினரின் கட்டுப்பாட்டில் இருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ-7)

## புதுக்குடியிருப்பு குண்டு வீச்சில் ஐவர் காயம்

வவுனியா,ஒக்.15

முல்லைத்தீவு மாவட்டம், புதுக்குடியிருப்பு மாத்தளன் பகுதியில் நேற்று மாலை இடம்பெற்ற குண்டு வீச்சுச் சம்பவம் ஒன்றில் 5 பொது மக்கள் படுகாயமடைந்தனர்.

வடமராட்சி கிழக்கின் பல பகுதிகளிலுமிருந்து இடம்பெயர்ந்து சென்று மாத்தளன் பகுதியில் கடற்றொழிலில் ஈடுபட்டு வந்தவர்களே இந்தச் சம்பவத்தில் காயமடைந்தனர்.

செல்லையா சிவபாதம் (வயது 51-ஆழியவளை), இராசரத்தினம் செல்வமலர் (வயது 44 - உடுத்துறை), வேலும்மயிலும் சிவரூபன் (வயது - 17 - உடுத்துறை), சின்னத்துரை செல்லத்தம்பி (வயது

(10ஆம் பக்கம் பார்க்க)



காலஞ்சென்ற ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவின் உடலுக்கு அவரது பிள்ளைகளான ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவும், அனுரா பண்டாரநாயக்காவும் கட்டி அணைத்தவாறு அஞ்சலி செலுத்துவதைப் படத்தில் காணலாம். அருகில் ஸ்ரீமாவோவின் மற்றொரு மகளான சுனேத்திரா பண்டாரநாயக்காவும் காணப்படுகிறார். தினேஷ்குணவர்த்தன, அலவி மௌலானா, ஜனாதிபதியின் செயலாளர் பாலபட்டபெண்டி, பட்டிவீரக்கோன் ஆகியோரும் படத்தில் உள்ளனர். *(படம்:அரசாங்க தகவல் இணையம்)*

## கணவரின் சமாதி அருகே ஸ்ரீமாவோவின் உடல் அடக்கம்



கொழும்பு,ஒக்.15

காலஞ்சென்ற முன்னாள் பிரதமர் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவின் பூதவுடல் முழு அரச மரியாதைகளுடன் நேற்று மாலை 5.45 மணியளவில் ஹொரகொல்லவிலுள்ள அவரது கணவர் எஸ்.டபிள்யூ.ஆர். டி.பண்டாரநாயக்காவின் சமாதிக்கு அருகில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

அவரது பிள்ளைகளான ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, சுனேத்திரா பண்டாரநாயக்க, அனுரா பண்டாரநாயக்க மற்றும் உறவினர்கள், அரசாங்கப் பிரமுகர்கள் முன்னிலையில் நல்லடக்க நிகழ்வு இடம்பெற்றது.

(10ஆம் பக்கம் பார்க்க)

## சிவில் நிர்வாக அலுவலகம் மூடப்பட்டு அதன் பணிகள் யாழ்.செயலகத்திடம்!

கொழும்பு,ஒக்.15

யாழ்.மாவட்டத்தில் இராணுவத் தரப்பின் கீழ் இயங்கிவரும் சிவில் நிர்வாக அலுவலகம் விரைவில் மூடப்படும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பாக அரச உயர்மட்டத்தில் முடிவு எடுக்கப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

யாழ்.சிவில் நிர்வாக அலுவலகம் தற்போது மேற்கொண்டுவரும் பணிகள், யாழ்.செயலகத்தின் கீழ் கொண்டுவரப்படும் என்றும் -

ஈ.பி.டி.பி. செயலாளர் நாயகமும் யாழ்.மாவட்ட எம்.பியாகத் தெரிவுசெய்யப்பட்டிருப்பவருமான டக்ளஸ் தேவானந்தாவுக்கு வழங்கப்படவிருக்கும் அமைச்சு, தற் போது சிவில் நிர்வாக அலுவலகம் கவனித்த முக்கிய பொறுப்புகளை யாழ்.செயலகம் மூலம் செயற்படுத்தும் என்றும்-

எதிர்பார்க்கப்படுவதாக கொழும்பில் சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் தெரிவித்தன. (உ)

## 100 பயணிகளுடன் சவூதி விமானம் கடத்தப்பட்டது

லண்டன்,ஒக்.15

சவூதி அரேபியாவிலிருந்து லண்டன் நோக்கிச் சென்றுகொண்டிருந்த 'போயிங் - 777' ரக விமானம் ஒன்று நூறு பயணிகளுடன் கடத்தப்பட்டுள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

சவூதி அரேபியாவுக்குச் சொந்தமான இந்த விமானம் கடத்தப்பட்ட பின்னர் டமாஸ்கஸ் நகரை நோக்கித் திசை திருப்பப்பட்டுள்ளதாகவும் நேற்றிரவு தெரிவிக்கப்பட்டது.

கடத்தல்காரர்கள் யார் என்பது பற்றியோ அவர்களின் கோரிக்கை பற்றியோ தகவல் எதுவும் வெளியாகவில்லை.

அண்மையில் இஸ்ரேலியர்களுக்கும் பலஸ்தீனியர்களுக்கும் இடையே மூண்டுள்ள வன்முறைகளுடன் தொடர்புடைய சம்பவமாக இது இருக்கலாம் என்று நம்பப்படுகிறது. மத்திய கிழக்கில் ஏற்பட்டுள்ள கொந்தளிப்பு நிலைமையால் அமெரிக்க மற்றும் பிரிட்டிஷ் நலன்களுக்கு அரபு தீவிரவாதிகளால் அச்சுறுத்தல் ஏற்பட்டிருக்கிறது. (ஐ-5)

## மண்டைதீவுப் பகுதியில் நேற்றிரவு கடும் மோதல்!

### குண்டுச் சத்தங்களால் நகர் அதிர்ந்தது

யாழ்ப்பாணம்,ஒக்.15

குடாக்கடலில் மண்டைதீவை அண்டிய பிரதேசத்தில் நேற்றிரவு 8.30 மணிமுதல் சுமார் ஒன்றரை மணி நேரம் குண்டுவெடிப்புச் சத்தங்களும் துப்பாக்கி வேட்டொலிகளும் கேட்ட வண்ணம் இருந்தன. இதனால் யாழ்.நகரப் பகுதி அதிர்ந்தது.

மண்டைதீவுக் கடற் பிரதேசத்தில் கடும் மோதல் இடம்பெற்றதா

(10ஆம் பக்கம் பார்க்க)

## ஜேர்மனிக்குச் சென்ற 12 தமிழர்கள் கைது!

### அடுத்த வாரம் திருப்பி அனுப்பப்படுவர்

பொன்,ஒக்.15


இலங்கையிலிருந்து ஜேர்மனிக்குச் சென்ற 4 பெண்கள் உட்பட 12 இலங்கைத் தமிழர்கள் அங்கு வைத்துக் கைதுசெய்யப்பட்டுத் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளனர். அவர்களது அரசியல் தஞ்சக் கோரிக்கை நிராகரிக்கப்பட்டிருக்கிறது.

ஜேர்மனியின் பிராங்பேட் விமான நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டி

(10ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# நீர் நிறைந்த விழிகளுடன் ஆறாத் துயரில்
# ஓராண்டு நினைவஞ்சலி



அமரர்

## அம்பலவாணர் சோதிலிங்கம்

(கஜமுகா ஸ்ரோர்ஸ் - வெற்றிலைக்கடை சோதி)

| அன்னையின் மடியில் | ஆண்டவன் அடியில் |
|---|---|
| 1953-05-12 | 1999-09-28 |

திதி : 15-10-2000 ஞாயிற்றுக்கிழமை

அன்புத் தெய்வமே! ஆருயிர் அப்பாவே!
அகலாது உங்கள் நினைவு அகிலம் உள்ளவரை
மாறாது உங்கள் உருவம் மனதினில் மறையாது
-உங்கள் நினைவு.
ஆண்டு பல ஆயினும் சீராட்டிப் பாராட்டிக்
கல்விதனைத் தந்து சிறப்புடன் வாழவைத்த
எம் குல விளக்கே!
ஊருக்கெல்லாம் சோதியாக நின்ற நீங்கள்
இப்பாருக்கெல்லாம் பண்பு சொன்ன அப்பா - நீங்கள்
பாவியர் நாம் படும்பாடு அறிய மாட்டீர்களோ?
உங்களை இழந்து இன்று பொட்டிழந்து நிற்கும்
அம்மாவும்
உங்கள் இழப்பால் உறக்கமற்ற சேய்களையும்
உற்ற துணையின்றி நடுவினில் விட்டு விட்டீர்களே!
இங்கு நாம் வாழ நீங்கள் மட்டும் தனியே
நற்கதி அடைந்ததும் ஏனோ?
அன்பாலும் பண்பாலும் அரவணைத்த அப்பா
ஆறுதல் சொல்ல யாரிருந்தென்ன - உங்கள்
ஆருயிர் அன்பிற்கு ஈடாகுமா?
தேறுதல் சொல்ல தெய்வம் இருந்தென்ன அப்பா!
உங்கள் திருமுகம் பார்த்தால் போதாதோ?
எம் உள்ளங்கள் துடித்திட எங்கு சென்றீர்கள் - அப்பா?
ஆண்டு ஒன்று போனாலும் ஆறாதப்பா - எம்மனது
ஆண்டுகள் பல ஆயினும் அப்பாவே!
உங்கள் நினைவு அகிலம் உள்ளவரை மாறாது.

இன்று (15.10.2000) ஞாயிறு நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதன்பின் நடைபெறும் மதிய போசனத்திலும் பங்குபெறுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

*உங்கள் நினைவால் வாடும்*

**மனைவி, பிள்ளைகள்,**
**உற்றார், உறவினர்கள்.**

*இல.33,*
*சிவன் பண்ணை வீதி,*
*யாழ்ப்பாணம்.* (79477)

### விண்ணப்ப திகதி நீடிப்பு

கொழும்பு,ஒக்.15

அமெரிக்க விசா லொத்தர் நிகழ்ச்சித் திட்டம் அடுத்த மாதம் முதலாம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்க விசா லொத்தர் நிகழ்ச்சித் திட்டம் தொடர்பான விண்ணப்பங்களை தபால் மூலம் அனுப்ப விரும்புபவர்கள் அடுத்த மாதம் முதலாம் திகதி நண்பகலுக்கு முன்பதாக அனுப்பி வைக்க வேண்டும் என கொழும்பில் உள்ள அமெரிக்கத் தூதரகம் விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.(ஐ-ரி)

### இடர்காலக் கொடுப்பனவு கிடைக்கவில்லை

நெல்லியடி,ஒக்.15

யாழ்.பிராந்திய சுகாதாரத் திணைக்களத்தின் கீழ் பணிபுரியும் டாக்டர்கள், ஊழியர்களுக்கான இடர்காலக் கொடுப்பனவை கடந்தமாதம் 30ஆம் திகதிக்கு முன் வழங்குமாறு சுகாதார அமைச்சு சுற்றறிக்கை அனுப்பி வைத்துள்ள போதிலும் இதுவரை இக்கொடுப்பனவு வழங்கப்படாததால் ஊழியர்களும், டாக்டர்களும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இவ்வருடம் ஜூலை மாதம்முதல் டிசெம்பர் வரையிலான 7 மாத காலத்திற்கு இடர்காலக்கொடுப்பனவு வழங்கப்படும் என ஏற்கனவே சுகாதார அமைச்சு சுற்றறிக்கை மூலம் தெரிவித்திருந்தது. (ஐ-109)

### இறுதிப் பரீட்சை

யாழ்ப்பாணம்,ஒக்.15

யாழ்.உயர் தொழில்நுட்ப நிறுவனத்தில் கல்விகற்று பழைய பாடத்திட்டத்தில் பரீட்சை எழுதிய மாணவர்களில் இதுவரை சித்தியடையாதவர்களுக்கான இறுதிப் பரீட்சைகள் நடைபெறவுள்ளன.

பழைய பாடத்திட்டத்திற்கமைவாக உயர் தேசிய கணக்கியல டிப்ளோமா மற்றும் உயர் தேசிய வணிகவியல் டிப்ளோமா ஆகிய கற்கை நெறிகளைக் கற்ற 2 ஆம் 3ஆம் கல்வியாண்டு மாணவர்களுக்கான பரீட்சைகளே எதிர்வரும் நவம்பர் மாத நடுப்பகுதியில் நடத்தப்படவுள்ளதாக பரீட்சை ஆணையாளர் அறிவித்துள்ளார். (ஐ-ரி-10)

### விஞ்ஞான கூடம் புனரமைப்பு

சண்டிலிப்பாய்,ஒக்.15

கடந்த போர்க்கால அனர்த்தங்களின்போது பலத்த சேதமடைந்த பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரியின் நான்கு அறைகளைக் கொண்ட வகுப்பறை மண்டபமும், விஞ்ஞான கூடமும் ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனத்தின் (ஜீ.ரி.இசட்) நிதியுதவியுடன் புனரமைப்புச் செய்யப்பட்டு வருகின்றன. இதற்கான கட்டட வேலைகள் பூர்த்தியடையும் நிலையில் உள்ளதாக கல்லூரி அதிபர் செல்வி பொ.கந்தசாமி தெரிவித்தார். (ஐ-135)

### 450 குடும்பங்கள் தஞ்சம்

நெல்லியடி,ஒக்.15

தென்மராட்சிப் பகுதியில் இடம்பெற்றுவரும் யுத்த சூழ்நிலையினால் அங்கிருந்து இடம்பெயர்ந்த 450 க்கும் மேற்பட்ட குடும்பங்கள் கரவெட்டி பிரதேச செயலர் பிரிவில் மூன்று நலனோம்பு நிலையங்களில் தஞ்சமடைந்துள்ளன.

கரவெட்டி கட்டைவேலி நலனோம்பு நிலையம், நாவலர்மடம் நலனோம்பு நிலையம், தேவரையாளி நலனோம்பு நிலையம் போன்ற பகுதிகளிலேயே அவர்கள் தங்கியுள்ளனர். (ஐ-109)

### தேங்காய் திருட்டு

நெல்லியடி,ஒக்.15

கொடிகாமம், கச்சாய், அல்லாரைப் பகுதிகளில் ஆள்கள் இல்லாத வளவுகளில் இருந்து தேங்காய்கள் திருடப்பட்டு வருவதாக முறையிடப்பட்டுள்ளது. (ஐ-109)


**நாகம்ஸ்**
சுன்னாகம்
பிரசாந்த், ரம்பா,
லிவிங்ஸ்டன்,
ராதாரவி நடித்த
பூமகள் ஊர்வலம்
(ரீல்ஸ்)
காட்சிகள்: 11.00, 2.30 (பு.நே.)
(79494)



**அறைகள் வாடகைக்கு!**

வாகனத் தரிப்பிட வசதியுடன் கூடிய சகல வசதிகளும் கொண்ட அறைகள் வாடகைக்கு உண்டு.

**கென்வூட் லொட்ஜ்(இன்)**
71, ஸ்ரேஸ் றோட்,
கிராண்ட்பாஸ், கொழும்பு - 14.
தொலைபேசி - 330127.
(79495)


# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

| வையகம் | | வானகம் |
|---|---|---|
| 08 | | 15 |
| - | | - |
| 03 | | 09 |
| - | | - |
| 1937 | | 2000 |



## அமரர் மாதர் விநாசித்தம்பி

எங்கள் குடும்பத் தலைவர் அமரர் மாதர் விநாசித்தம்பி அவர்களின் மறைவுச் செய்திகேட்டு பல வழிகளிலும் உதவியவர்களுக்கும், இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்டவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இன்று (15.10.2000) ஞாயிற்றுக்கிழமை நடைபெறும் வீட்டுக்கிருத்திய நிகழ்விலும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்களை அன்புடன் அழைக்கின்றோம்.

**மனைவி,**
**பிள்ளைகள்,**
**பேரப்பிள்ளைகள்.**

*புதிய சந்தை அருகில்,*
*மல்லாகம்.* (79499)

# கண்ணீர் அஞ்சலி



எமது நிலையத்தின் விளையாட்டுக் கழகத் தலைவராகவும், போஷகராகவும் சேவையாற்றிய
நீர்வையூர் மாமனிதர்

## அமரர் கந்தையா பரமநாதன்

(ஓய்வுபெற்ற உதவி முகாமையாளர் - ஹற்றன் நஷனல் வங்கி, கொழும்பு.)

அவர்களின் திடீர் மறைவால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**ஸ்ரீ கணேச சனசமூக நிலையம்.**

*நீர்வேலி.* (79479)

# மரண அறிவித்தல்

## திருமதி தில்லையம்பலம் இரஞ்சிதமலர்

குப்பிளானைச் சேர்ந்த திருமதி தி.இரஞ்சிதமலர் அவர்கள் நேற்று (14-10-2000) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

இவர் காலஞ்சென்ற தில்லையம்பலத்தின் அன்பு மனைவியும் சசிதரன் (பயிற்சி ஆசிரியர் தமிழ் - கோப்பாய் ஆசிரியர் கலாசாலை), சசிகலா (கனடா), சசிகுமார் (சுவிஸ்), சந்திரகுமார் (லண்டன்), சசிரேகா ஆகியோரின் பாசமிகு தாயாரும் தாரணி, திருக்குமார்(கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும் திருஜாவின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(15-10-2000) ஞாயிற்றுக்கிழமை மதியம் 12 மணியளவில் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக காடாக்கரம்பை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:-

**தி.சசிதரன் (மகன்)**

*மயிலங்காடு வீதி,*
*குப்பிளான் தெற்கு,*
*ஏழாலை.* (79496)

# இந்திய அரசின் பிரதிநிதியாக ஐ.நா. கூட்டத்தில் வைகோ

## ஈழப் பிரச்சினை குறித்துப் பேசுவார்?



வை.கோபாலசாமி

புதுடில்லி,ஒக்.15

ஐ.நா.சபையின் புத்தாயிரமாண்டு அமர்வுக் கூட்டத்தில் இந்தியாவின் பிரதிநிதியாக ம.தி.மு.கவின் பொதுச் செயலாளர் வை.கோபாலசாமி கலந்து கொள்கிறார்.

இதற்காக அவர் நேற்று அமெரிக்காவுக்குப் புறப்பட்டுச் சென்றார். சர்வதேசப் பிரச்சினைகள் தொடர்பான விவாதங்கள் ஐ.நா கூட்டத்தில் நடைபெற உள்ளதாலும் -

ஈழத் தமிழர் பிரச்சினை இந்தியாவிலும் தாக்கங்களை ஏற்படுத்துவதாலும் -

ஐ.நா.சபைக் கூட்டத்தில் வை.கோபாலசாமி உரை நிகழ்த்தும் போது இலங்கை இனப்பிரச்சினை தொடர்பாகக் குறிப்பிடக் கூடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இரண்டு வாரங்கள் நடைபெற உள்ள ஐ.நா.மன்றக் கூட்டத்தில் கலந்து கொண்டு விட்டு எதிர்வரும் 26ஆம் திகதி வை.கோபாலசாமி நாடு திரும்புவார். (ஒ-8)

# காஸாவில் இஸ்ரேல் படையுடன் பலஸ்தீனர்கள் மீண்டும் மோதல்!

காஸா,ஒக்.15

ஜோர்தான் நதியின் மேற்குக் கரையிலும் காஸாவிலும் இஸ்ரேலியப் படைகளுக்கும் பலஸ்தீனர்களுக்கும் இடையே மீண்டும் மோதல்கள் நடைபெற்று வருவதாகவும் -

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற கலவரங்களில் ஒரு பலஸ்தீனர் கொல்லப்பட்டதுடன் ...ர் 50பேர் படுகாயமடைந்ததாக கூறப்படுகிறது.

இரு வாரங்களுக்கு முன்னர் இஸ்ரேல் கட்டுப்பாட்டில் உள்ள பிரதேசங்களில் வாழும் பலஸ்தீனர்களுக்கும் இஸ்ரேலியப் படையினருக்கும் இடையே ஏற்பட்ட வன்முறைக் கலவரங்கள் தணிந்திருந்த போதும், பலஸ்தீன நிர்வாகக் கட்டடங்கள் மீது இஸ்ரேல் வான் தாக்குதல்களை மேற் கொண்டதையடுத்து மோதல்கள் மீண்டும் தொடங்கியுள்ளன.

பழைய ஜெருசலேமில் நேற்று முன்தினம் தொழுகையின் பின்னர் வீதியில் திரண்ட பலஸ்தீனர்கள் இஸ்ரேலியப் படைகள் மீது கற்கள் மற்றும் போத்தல்களை வீசித் தாக்கியதாகவும் -

கிழக்கு ஜெருசலேமில் அல் - அஹ்சா மசூதியில் அணி திரள்வதற்காக நுழைய முயன்ற நூற்றுக் கணக்கான பலஸ்தீன இளைஞர்களை இஸ்ரேலியப் பொலீஸார் தாக்கிக் ... செய்ததாகவும் -

வெளிநாட்டுச் செய்தி நிறுவனம் ஒன்று தெரிவித்துள்ளது.

இந்த மோதல்களை அடுத்து எகிப்தியத் தலைநகர் கெய்ரோவில், இஸ்ரேல் மீது அரபு நாடுகள் போர் தொடுக்க வேண்டும் என்று வலியுறுத்தி பிரமாண்டமான ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்று நடத்தப்பட்டது.

மேற்காசியப் பகுதியில் நிலவும் பதற்ற நிலையைத் தொடர்ந்து ஆபிரிக்கா, மேற்காசியா, பாரசீக வளைகுடா, தெற்காசியா ஆகிய பகுதிகளில் உள்ள நாடுகளில் இயங்கி வந்த தனது தூதரகங்களை அமெரிக்கா தற்காலிகமாக மூடியுள்ளது.

# யூகோ... மீதான தடைகள் குறித்து ஜப்பானிய அரசு ஆலோசனை

டோக்கியோ.ஒக்.15

யூகோஸ்லாவியாமீது விதித்திருந்த தடைகளை நீக்குவது குறித்து ஜப்பான் ஆலோசனை நடத்தி வருகின்றது.

இத்தகவலைப் பிரதமர் அலுவலகப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

யூகோஸ்லாவியாவில் இடம்பெற்றுவந்த இன ஒழிப்பு நடவடிக்கைகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்து 1998 ஆம் ஆண்டு ...ங்கு முதலீடுகள் செய்வதை ஜப்பான் நிறுத்தி வைத்ததுடன் அதிகாரிகள் பரிமாற்றங்களையும் நிறுத்தியது.

அத்துடன் ஜப்பானில் இருந்த யூகோஸ்லாவியாவின சொத்துக்களும் முடக்கப்பட்டிருந்தன.

தற்போது கொஸ்டுனிகா தலைமையிலான புதிய அரசு யூகோஸ்லாவியாவில் பதவியேற்றதை அடுத்து அந்தத் தடைகளைத் தளர்த்துவது குறித்து யப்பான் ஆலோசித்து வருகிறது. (ஒ-8)

### பிரிட்டிஷ் தூதரகத்தில் குண்டு வெடிப்பு!

யேமனில் பிரிட்டிஷ் தூதரகத்தில் சக்திவாய்ந்த குண்டு வெடித்ததில் தூதரகக் கட்டடம் பலத்த சேதத்துக்குள்ளானது.

இச்சம்பவத்தில் உயிரிழப்புகள் குறித்து தகவல் ஏதும் இதுவரை தெரிவிக்கப்படவில்லை.

# இஸ்ரேலைக் கண்டித்து ஓமானில் ஆர்ப்பாட்டம்

பலஸ்தீன நிலைகள் மீது இஸ்ரேல் தாக்குதல்கள் நடத்துவதைக் கண்டித்து ஓமான் தலைநகர் மஸ்கெட்டில் நேற்று முன்தினம் பெரும் ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

ஆர்ப்பாட்டக்காரர்கள், இஸ்ரேலுடனான உறவுகளை அரபு நாடுகள் ஒட்டுமொத்தமாக நிறுத்த வேண்டும் என்று வலியுறுத்தினார்கள்.

மஸ்கெட்டில் இயங்கி வந்த இஸ்ரேலிய வர்த்தக அலுவலகத்தை ஓமான் அரசு மூடியதுடன், இஸ்ரேலில் இருந்த தனது வர்த்தக அலுவலகத்தையும் ஓமான் அரசு மூடியிருந்தது.

அரபு நாடுகளுள் இஸ்ரேலுடன் குறைந்தளவு உறவுகளைக் கொண்டிருக்கும் கட்டார உட்பட அனைத்து அரபு நாடுகளும் ஓமானின் நடவடிக்கையைப் பின்பற்ற வேண்டும் என்றும் ஆர்ப்பாட்டக்காரர்கள் கோரினார்.

## தென் கொரிய ஜனாதிபதிக்கு நோபல் பரிசு

இந்த ஆண்டின் சமாதானத்துக்கான நோபல் பரிசு தென்கொரிய ஜனாதிபதி கெங் டே ஜொங்குக்கு வழங்கப்பட்டுள்ளது.

ஜனநாயக பணிகளுக்காகவும் கிழக்கு ஆசியாவில் மனித உரிமைகளை மேன்மைப்படுத்துவதற்கான சேவைகளுக்காகவும் பிளவுபட்டிருந்த கொரிய தீபகற்பத்தில் 50 ஆண்டுகளாக நிலவிவந்த எதிர்ப்புணர்வுகளைத் தணிய வைத்து அங்கு அமைதியை உருவாக்கிய பணிகளுக்காகவும் கெங் டே ஜொங் இந்தப் பரிசைப் பெற்றுள்ளார். (இ-ரி)

## குரன்யேவுக்கு ஆயுட்காலத் தடை

கேப்டவுன்,ஒக்.15

தென் ஆபிரிக்கக் கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவர் ஹன்சி குரன்யே முதல்தரக் கிரிக்கெட் போட்டிகளில் விளையாட ஆயுட்காலத் தடை விதிக்கப்பட்டுள்ளதாக தென் ஆபிரிக்க ஐக்கிய கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது.

இந்தியாவுடனான கிரிக்கெட் போட்டி ஒன்றின் முடிவை சூதாட்டக்காரர்களின விருப்பத்துக்குச் சாதகமாக மாற்ற லஞ்சம் வாங்கியதாக குரன்யே ஒப்புக் கொண்டதை அடுத்தே இந்தத் தண்டனை வழங்கப்பட்டுள்ளதாகவும் -

அவர் இந்தத் தண்டனை குறித்து மேன்முறையீடு செய்வதற்கு 7 நாள்கள் அவகாசம் வழங்கப்பட்டுள்ளதாகவும் மேற்படி சபையின் பேச்சாளர் தெரிவித்தார்.

கிரிக்கெட் போட்டிகளுடன் தொடர்பு கொண்ட சகல அமைப்புகளுக்கும் தண்டனை குறித்துத் தெரியப்படுத்தி உள்ளதாகவும் அவர் கூறினார். (ஒ-8)

## நரசிம்மராவ் பற்றிய பாடம் நீக்கப்பட்டது

ஹைதராபாத்,ஒக்.15

இந்தியாவின் ஆந்திர மாநிலத்தில் பாடசாலைப் பாடப் புத்தகத்தில் இடம்பெற்றுள்ள முன்னாள் பிரதமர் நரசிம்மராவ் பற்றிய பாடத்தை நீக்குவதற்கு மாநில அரசு முடிவு செய்துள்ளது.

ஆந்திர மாநிலத்தைச் சேர்ந்த நரசிம்மராவ் மாநில அமைச்சராகவும், முதல்வராகவும்,இந்தியப் பிரதமராகவும் பதவிகள் வகித்ததால், ஆந்திராவில் 8ஆம் வகுப்பு இந்திப் பாடப் புத்தகத்தில் அவரைப் பற்றிய பாடம் சேர்க்கப்பட்டது.

தனது அரசு கவிழாமல் காப்பாற்ற நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலருக்கு லஞ்சம் கொடுத்ததாக நரசிம்மராவுக்கு தற்போது நீதிமன்றம் தண்டனை வழங்கியுள்ளதால் அவரைப் பற்றிய பாடத்தை பள்ளிப் புத்தகத்தில் இருந்து நீக்க தீர்மானித்துள்ளதாகவும் -

அதற்குப்பதிலாகக் கடந்த ஒலிம்பிக் போட்டிகளில் மகளிருக்கான பளுதூக்கும் போட்டியில் வெண்கலப் பதக்கம் வென்றவரும், ஆந்திராவைச் சேர்ந்தவருமான கர்ணம் மல்லேஸ்வரி பற்றிய பாடத்தைச் சேர்க்க உள்ளதாகவும் ஆந்திரமாநில அரசு அறிவித்துள்ளது. (ஒ-8)

## வீரப்பன் அனுமதி

அரசுத் தூதர்களாகச் சென்றுள்ள கோபால், நெடுமாறன் உள்ளிட்ட குழுவினர் வீரப்பனின் அனுமதி கிடைத்ததை அடுத்து காட்டுக்குள் நுழைந்து சென்றுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-8)


# சேவை நலன் பாராட்டு



## திரு.என்.ஆர்.தனரத்தினம்

6-10-2000 அன்று ஓய்வு பெற்ற முகாமையாளர்,

வடபிராந்திய போக்குவரத்துச் சபை, காரைநகர் சாலை.

### மக்களினதும் ஊழியரினதும் நலன் காத்த சேவையாளன்



முப்பத்தொரு ஆண்டுகள் போக்குவரத்துச் சேவையில் கடமையாற்றி இறுதிக் கட்டத்தில் இலங்கைப் போக்குவரத்துச் சபையில் அதிமுக்கிய பதவியான சாலை முகாமையாளராக இருந்து சேவையாற்றி 6.10.2000ஆந் திகதி இளைப்பாறிய எனது அன்புக்கும், விசுவாசத்துக்கும் உரிய திரு.என்.ஆர்.தனரத்தினம் அவர்களது சேவை நலன் பாராட்டு நிகழ்வுக்கு வாழ்த்துச் செய்தியை வழங்குவதில் பெரும் மகிழ்ச்சி அடைகின்றேன்.

காரைநகர் சாலை மீள புனரமைத்து மீண்டும் செயற்படுத்த நேர்ந்த போது இவரது ஆற்றலை அறிந்து நான் இவரை அந்தச்சாலையின் முகாமையாளராக அமர்த்தினேன். இவர் அந்தச்சாலையின் திறப்புவிழா அதி சிறப்பாக அமையவும், அந்தச்சாலையின் இன்றைய முன்னேற்றத்திற்கு என்னுடன் இரண்டறக் கலந்து தனிப்பட்டவிதமாக எனக்கும் வ.பி.போ.சபைக்கும் இவர் ஆற்றிய பணி மகத்தானது.

இன்று வ.பி.போ.சபையின் முகாமைத்துவப் பணியில் ஈடுபட்டுள்ளோருக்கும், வருங்காலத்தில் முகாமைத்துவப் பணிகளை ஏற்கவுள்ள பணியாளர்களுக்கும் இவர் ஒரு முன் உதாரணமாவார்.

இவரது மகத்தான மக்கள் சேவையைப் பாராட்ட, தாமாக முன்வந்து செயல்படும் என் அன்பிற்கும், மதிப்பிற்கும் உரிய காரைநகர் சாலை ஊழியர்களை மனதாரப் பாராட்டி காரைநகர்ச் சாலை முகாமையும், ஊழியர்களும் மக்கள் சேவையையே மகேசன் சேவையெனக் கொண்டு தற்போது ஆற்றும் பணியைத் தொடர வேண்டும் என்று அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.

வி.எஸ்.சொக்கலிங்கம்
பொது முகாமையாளர்
வ.பி.போ.சபை.

### நன்றி மறப்பது நன்றன்று

எமது சாலை அதிபர் அவர்கள் சாலை ஊழியர்கள் அனைவருக்கும் பெற்ற தாய், தந்தை போன்று அன்பு காட்டி எம்மிடம் வேலை வாங்கினார்.



இவர் எமக்குச் செய்த சேவை அளப்பரியது. சாலையில் இருந்து ஓய்வுபெறும் அதிபர் திரு. தனரத்தினம் ஐயா அவர்கள் ஆரம்பக் கல்வி தொடக்கம் உயர்கல்வி வரை கல்வி பயின்றுள்ளார்.

தமிழ்நாட்டில் ஒரு வருடம் வை.எம்.சீ.ஏ மூலம் உடற்பயிற்சி ஆசிரியராகப் பயிற்சி பெற்று மருதானை சாஹிறாக் கல்லூரியில் உடற்பயிற்சி ஆசிரியராக 4 வருடங்கள் கடமை புரிந்துள்ளார். பின்னர் இ.போ.சவில் உத்தியோகம் பெற்று படிப்படியாக பதவி உயர்வுபெற்று யாழ்.பஸ்நிலையப் பொறுப்பதிகாரியாக பல வருடங்கள் கடமையாற்றி 1999ஆம் ஆண்டு ஆறாம் மாதம் காரைநகர் சாலையின் அதிபராகப் பொறுப்பேற்றார்.

அப்பொழுது சாலையில் இரண்டு பஸ்கள் மட்டுமே சேவையில் ஈடுபட்டன. தற்சமயம் எட்டுப் பஸ்கள் சேவையில் ஈடுபடுத்தப்படுகின்றன. 22 இலட்சம் ரூபா செலவில் புனரமைக்கப்பட்ட சாலை 1999 ஒக்ரோபர் 22 இல் மத்திய போக்குவரத்துச்சபை முகாமையாளரால் திறந்து வைக்கப்பட்டது.

இவர் சேவையைத் திறம்பட ஆற்றியமைக்கு இவரின் கீழ் வேலை செய்யும் அதிகாரிகளும் தொழிலாளிகளும் வழங்கும் ஒத்துழைப்பும் ஒரு காரணம். எல்லாவற்றுக்கும் மேலாக இவருக்கு சகல ஒத்துழைப்புக்களும் தந்த பொது முகாமையாளர் திரு. சொக்கலிங்கம் ஐயா அவர்களை ஊழியர்களும் காரைநகர் மக்களும் ஒருபோதும் மறக்கமாட்டார்கள். ஓய்வுபெறும் எமது சாலை அதிபர் திரு. என்.ஆர்.தனரத்தினம் அவர்கள் எல்லாம் வல்ல ஈழத்துச் சிதம்பர சௌந்தராம்பிகை சமேத சுந்தரேஸ்வரப் பெருமானின் அருள்பெற்று சிறப்புடன் வாழ வேண்டுகின்றோம்.

கே.சி.கந்தசாமி
வடபிராந்திய போக்குவரத்துச் சபை
காரைநகர் சாலை ஊழியர்கள் சார்பில்.

ஓய்வுபெறும் காரைநகர்ச் சாலை அதிபர் என்.ஆர். தனரத்தினம் அவர்களை
நீடூழி வாழ வாழ்த்தி இவரது சேவையைப் பாராட்டுகிறார்கள்
**காரைவாழ் யாழ்.வர்த்தகர்கள்.**

(C/13389)

# சில வேட்பாளர், உதவியாளர்களின் நடத்தை கண்டிக்கப்பட வேண்டியது

## ஐரோப்பிய ஆணைக்குழுவின் அறிக்கை

தேர்தல் வேட்பாளர்களும் அவர்களின் உதவியாளர்களும் தங்கள் சொந்தத்தேவையைப் பூர்த்தி செய்ய நடந்து கொண்ட முறைகள் கடுமையாகக்கண்டிக்கப்பட வேண்டியவை ஆகும். இவ்வகையான செயல்கள் பொதுமக்களிடையே தேர்தல் தொடர்பான நம்பிக்கையைக் குறைக்கும் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை.

ஐரோப்பிய ஆணைக் குழுவின் தேர்தல்கள் கண்காணிப்புக் குழுவினர் வெளியிட்டுள்ள அறிக்கையில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

தேர்தல் ஆணையாளர் தயானந்த திசாநாயக்க விடுத்த வேண்டுகோளை அடுத்து இலங்கை வந்த ஐரோப்பிய ஆணைக்குழுவினர் தாம் திரட்டிய தகவல்களை அறிக்கையாக வெளியிட்டுள்ளனர்.

அறிக்கையின் விவரம் வருமாறு:-

தேர்தல் அன்று தேர்தல் கண்காணிப்பாளர்கள் யாழ். மாவட்டம் உட்பட 22 மாவட்டங்களிலுள்ள 400-க்கும் மேற்பட்ட வாக்களிப்பு நிலையங்களை தமது கண்காணிப்புக்கு உட்படுத்தினர், அத்துடன் வாக்கு கணக்கெடுப்புகளை நேரடியாகப் பார்வையிட்டனர்.

ஐரோப்பிய ஆணைக் குழுவின் தேர்தல் கண்காணிப்புப் பிரிவினருக்கு தேர்தல் ஆணையாளரினாலும் மற்றும் அலுவலகர்களினாலும் நல்ல ஊக்குவிப்பு வழங்கப்பட்டது.

### தகவல் ஊடகங்கள்

தேர்தல் பிரசார நடவடிக்கைக்குஅரச கட்டுப்பாட்டுக்குள்உள்ள தகவல் ஊடகங்களால் சமஉரிமை வழங்கப்படாதது கவலைக்குரிய விடயம்ஆகும்.

சில கட்சிகள் தேர்தல் சட்டத்திற்குப் புறம்பாகத் தேர்தல் பிரசார நடவடிக்கைகளை முடிவுக்குக் கொண்டு வரப்பட்ட ஒக்ரோபர் 7 ஆம் திகதிக்குப் பிறகும் சில பகுதிகளில் தேர்தல் பிரசாரம் மேற்கொண்டதைக் கவனிக்கக்கூடியதாக இருந்தது.

### தேர்தல் வன்முறைகள்

தேர்தல் பிரசாரங்களில் வன்முறைகள் காணப்பட்டன. தேர்தல் கண்காணிப்பாளர்கள் இலங்கை வந்தடைந்ததிலிருந்து இடம்பெற்ற வன்முறைகளில் மிக அசம்பாவிதமாகக் கருதப்படுவது கொலைகளும் பாரிய அளவிலான பொருள் சேதங்களுமாகும்.

இச் சம்பவங்களில் முக்கியமாகக் கருதப்படுவது மூதூர், மதவாச்சி ஆகிய இடங்களில் இடம்பெற்ற இரண்டு குண்டு வெடிப்புகளுமே. இக் குண்டு வெடிப்புகளில் கணிசமான உயிர் இழப்புக்கள் ஏற்பட்டுள்ளன. மேலும் புலிகளின் கட்டுப்பாட்டுக்குள் உள்ள பகுதிகளில் எந்த விதமான தேர்தல் பிரசாரங்களை மேற்கொள்வதும் சாத்தியப்படவில்லை.

மத்திய மாகாணத்திலேயே பாரிய அளவிலான தேர்தல் வன்முறைகள் காணப்பட்டன மற்றும் ஏனைய மாகாணங்களிலும் வழமையைப் போல் சிறிய அளவிலான தேர்தல் வன்முறைகள் காணப்பட்டன. எனினும் ஒரு ஜனநாயக நாட்டில் இவ்வகையான அனைத்து வன்முறைகளும் கடுமையாகக் கண்டிக்கப்பட வேண்டியவையாகும். கடுமையான பொலீஸ் பாதுகாப்பினாலும், கட்சிகளின் ஒற்றுமையினாலும் நாட்டின் சில பகுதிகளில் வன்முறைகள் குறைவாகவே காணப்பட்டன. எனினும் மத்திய மாகாணத்தில் இத்தகையதொரு சூழ்நிலை நிகழவில்லை.

### தேர்தல் நடைமுறை

வாக்கெடுப்பு தொடர்பான நடவடிக்கைகள் முறையாகவும் திறமையாகவும் நடத்தப்பட்டதென எமது குழுவினர் தெரிவித்தனர். மேற்கூறிய காரணங்களைத் தவிர வாக்கெடுப்பு மற்றும் வாக்குச் சாவடிகள் மிகவும் பாதுகாப்புடன் கையாளப்பட்டதுடன் சில இடங்களில் வாக்கெடுப்புக்களுக்கு அழிக்க முடியாதமையே பயன்படுத்தப்பட்டது.

தேர்தல் வன்முறைகளினாலும், தேர்தல் சட்டத்திற்கு புறம்பாக நடந்த நடவடிக்கைகளினாலும் முக்கியமான சில பகுதிகள் எமது கண்காணிப்பாளர்களால், மிகவும் கவனமாக உற்று நோக்கப்பட்டன. தேர்தல் அன்று நடந்த வன்முறைகள் நாங்கள் ஏற்கனவே எதிர்பார்த்ததாகவே இருந்தன.

இப்படி தெரிவிக்கப்பட்டுள்ளது.

# 400 குடும்பங்களுக்கு 2000 ரூபா கொடுப்பனவு

சண்டிலிப்பாய் பிரதேச செயலகப் பிரிவில் இடம்பெயர்ந்தோருக்கான 2 ஆயிரம் ரூபா நிவாரணக் கொடுப்பனவு மேலும் இரண்டாயிரத்து 400 குடும்பங்களுக்கு வழங்கப்படவுள்ளது.

சங்கானையில் இயங்கிவரும் மக்கள் வங்கிக் கிளையில் நாளை முதல் இக்கொடுப்பனவைப் பெற்றுக் கொள்ள முடியும் என்று சண்டிலிப்பாய் பிரதேச செயலர் நா. வேதநாயகன் தெரிவித்தார்.

இக்கொடுப்பனவை பெறுவதற்கு இடம் பெயர்ந்தவர்கள் தத்தமது பிரிவு கிராம அலுவலரின் கடிதத்தை பெற்றுக் கொண்டு செல்ல வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது

ஜே- 130, ஜே- 131, ஜே-132, ஜே-134, ஜே-135, ஜே-136, ஜே-137, ஜே-141, ஜே-144 ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளில் இடம்பெயர்ந்து தங்கியிருப்பவர்களுக்கே இக்கொடுப்பனவு கிடைக்கவிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது

(ஐ-135)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்

தம்பசிட்டி வீதி, பருத்தித்துறையில் இயங்கும்

### மெதடிஸ்த கல்வி நிறுவனத்தில்

கல்வி கற்று 2000 ஆம் ஆண்டில் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்கள், நூறுக்கு மேற்பட்ட புள்ளிகளைப் பெற்ற மாணவர்கள் அனைவரையும், அவர்களை ஊக்குவித்த நிர்வாகி, ஆசிரியர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

| பெயர் | பெற்ற புள்ளி |
|---|---|
| 1. தாரணி - தி | 162 |
| 2. அஜந்தன் - அ | 157 |
| 3. நிசாந்தினி - சி | 139 |
| 4. அச்சுதன் - சி | 136 |
| 5. கயூகரன் - ச | 134 |
| 6. கஜந்தன் - ச | 134 |
| 7. நிஜிதா - ஆ | 133 |
| 8. துவாரகா - ச | 118 |
| 9. திவ்வியா - ர | 110 |
| 10. நந்தகோபன் - பா | 108 |
| 11. மேனன் - இ | 108 |

வாழ்த்துவோர்:

பெற்றோரும், பழைய மாணவரும்.

[சி/13395]



## மீண்டும் சுன்னாகத்தில்

"ஒளியகம்" என்ற பெயருடன் (பழைய "சுடரொளி" முன்பாக, சுன்னாகம் பல நோ. கூ. சங். காரியாலயத்திற்கு அருகே) K.K.S. வீதியில் அந்திய கால சேவையை ஆரம்பித்திருக்கிறோம்.

★ அழகிய பேழைகள் ★ பிரேத ஊர்தி
★ மலர் வளையம் ★ எம்பாமிங் சேவை

குறைந்த செலவில் நிறைந்த சேவைக்குத் தொடர்பு கொள்க,

### இல. 76, ஒளியகம் அந்தியகால சேவை

K. K. S. வீதி, சுன்னாகம்.

(79490)


# ஓய்வூதிய வவுச்சர்கள் கிடைத்தன

தென்மராட்சி, ஒக். 15

யாழ். மாவட்ட உள்ளூராட்சி ஓய்வூதியர்களின் செப்ரெம்பர், ஒக்ரோபர் மாதங்களுக்குரிய ஓய்வூதிய வவுச்சர்கள் தபால் நிலையங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளன.

(ஐ-117)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி யோகம்மா பரமநாதன்

திருமதி யோகம்மா பரமநாதன் 13—10—2000 வெள்ளிக்கிழமை அன்று வவுனியாவில் காலமாகி விட்டார்.

இவர் 215, மூத்தவிநாயகர் வீதி, நல்லூர் கிழக்கு, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகக் கொண்டவரும காலஞ் சென்ற விஷாசி, பரமநாதனின் அன்பு மனைவியும், லோகநாதன் (நிர்வாக உத்தியோகத்தர், பிரதேச செயலகம், வேலணை), செல்வநாதன்(எழுதுநர், மாவட்டப் பதிவாளர் அலுவலகம், கச்சேரி, யாழ்ப்பாணம்), புஷ்பநாதன் (ஜேர்மனி), ஜீவநாதன் (மட்டக்களப்பு), ரஜனி (மட்டக்களப்பு), ரகுநாதன் (யாழ்.மாநகர சபை), ரவிநாதன்(வவுனியா),ராகினி, ஜெகநாதன் (ஜேர்மனி), ஜெயநாதன் (மோட்டார் போக்குவரத்துத் திணைக்களம், பிரதேச செயலகம், மருதங்கேணி), மாலினி (நாவற்குழி), பவானி, பாஸ்கரநாதன் (வவுனியா), மைதினி (எழுதுநர், பிரதேச செயலகம், உடுவில்). மைந்தினி (ஆசிரிய பயிற்சிக் கலாசாலை, பலாலி) ஆகியோரின் அன்புத் தாயாரும், சொர்ணகாந்தரூபி (எழுதுநர்,யாழ். போதனா வைத்தியசாலை), புஷ்பராணி, சரோஜினிதேவி, பாலச்சந்திரன் (தபாலதிபர்,மட்டக்களப்பு), யோகநாதன், சசிசித்திரா ஆகியோரின் அன்பு மாமியாரும், ஜெயகாந், ராம்ரமணன்(யாழ். பல்கலைக்கழக வணிக முகாமைத்துவபீட மாணவன்), ஜெயகௌரி, மேனகா, சித்ரா, கஸ்தூரி, கங்காதரன், அலோமா கஸ்தூரி, நிராஜ், ஹம்சானந்தி, பிரசாந், பிரசானந்தி, நிசானந்தி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் வவுனியாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளுகின்றோம்.

தகவல்:

ப. ஜெயநாதன் (மகன்)

215, மூத்தவிநாயகர் வீதி,
நல்லூர் கிழக்கு.

தற்காலிக முகவரி:
கோயில் வீதி,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.

(79483)

பட வரைஞர்

## ஆறுமுகம் கந்தையா

(இராஜேந்திரா ஸ்ரோஸ்- யாழ்ப்பாணம்)

கட்டுவனைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் அரியாலை, திருமகள் வீதியை வசிப்பிடமாகக் கொண்டவருமான ஆறுமுகம் கந்தையா நேற்று (14-10-2000) சனிக்கிழமை காலை காலமானார்.

அன்னார் இராசபூரணத்தின் அன்புக் கணவரும், சிவகௌரி (ஜேர்மனி), ஜெயமலர் (விசுவமடு), சிவகுமார் (ஜேர்மனி), ஜெயந்திரன் (ஜேர்மனி), சுதர்சன், சுதாகரன், சுதர்சினி ஆகியோரின் அன்புத்தந்தையாரும் யோகேந்திரன்(ஜேர்மனி) சுபேந்திரன்(விசுவமடு), தர்சினி (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமனாரும், பார்த்தீபன்,பாரதி,டெனிசாளினி, சுபாசினி,சஞ்சீவன் பிரசாந்தன்,ஜெனிற்றா ஆகியோரின் பேரனும், காலஞ் சென்றசெல்லப்பாஆறுமுகம்தங்கம்மாஅவர்களின் அன்பு மகனும், காலஞ்சென்ற சபாரத்தினம், இராசம்மாவின் அன்பு மருமகனும், நாகராசா, காலஞ்சென்ற சோதிலிங்கம், குகராசா, இராசலட்சுமி, இராசேஸ்வரி, விமலாதேவி, இரவீந்திரன் ஆகியோரின் அன்பு சகோதரனும் தனலட்சுமியின் அத்தானும் வேலுப்பிள்ளை வெற்றிவேலின் சகலனும் சுஜீவன், பிரதீபா, டிரக்ஷனா, பிரதீபன் ஆகியோரின் பெரிய தகப்பனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(15-10-2000) ஞாயிற்கிழமை 12.00மணிக்கு விளையாட்டரங்க வீதி, கல்வியங்காடு இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக செம்பாடு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்

க. சுதாகரன் (மகன்)

விளையாட்டரங்க வீதி,
கல்வியங்காடு.
யாழ்ப்பாணம்.

(79498)

## ஆறுமுகம் கந்தசாமி

(இளைப்பாறிய அதிபர், புகையிரத நிலையம்)

மல்லாகத்தைச் சேர்ந்த ஆறுமுகம் கந்தசாமி 13—10—2000 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஆறுமுகம்—நாகமுத்து தம்பதிகளின் மகனும் காலஞ்சென்ற சின்னத்துரை—காமாட்சிப்பிள்ளை தம்பதிகளின் மருமகனும் நாகேஸ்வரியின் அன்புக் கணவரும் கோசலா — பல்குணன் லாலா (ஆசிரியர், மல்லாகம் ம.வி ), சுகன்யா—கந்தசாமி (சட்டத்தரணி—கனடா), சஞ்சீவன் (அளவெட்டி, மல்லாகம் ப.நோ.கூ.சங்கம்) ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்றவர்களான தங்கப்பிள்ளை, கணபதிப்பிள்ளை, பூரணம், வாலைப்பிள்ளை, நடராசா, மீனாட்சிப்பிள்ளை, கிருஷ்ணபிள்ளை, கண்மணி ஆகியோரின் அன்புச் சகோதரனும் சுத்தசாமி, சுந்தரமூர்த்தி, இராஜேஸ்வரி ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று(14-10-2000) சனிக்கிழமை பிற்பகல் 1-30 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கொத்தியாலடி இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

க. சஞ்சீவன் (மகன்)

சி. டி. பல்குணன்லாலா (மருமகன்)

முகாந்திரம் ஒழுங்கை,
மல்லாகம்.

(79500)

# உதயன்

## புதிய மொந்தையில் பழைய கள்ளு?

தேர்தல் களத்தில் சமர் முற்றுப்பெற்று விட்டது. பொது மக்கள் ஐக்கிய முன்னணியிடமே மீண்டும் ஆட்சிப் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டுள்ளது. புதிய பிரதமராக ரத்னசிறி விக்கிரமநாயக்கா பதவிப் பிரமாணம் செய்துவிட்டார்.

இம்முறை தேர்தல் மூலம் ஆட்சி மாற்றம் ஒன்று ஏற்படுமாயின், ஒரு சில மாதங்களுக்கேனும் போர் அனர்த்தங்கள் தணிந்து அவல வாழ்வுக்கு சிறு இடைவெளி கிடைக்கும் என்ற எதிர்பார்ப்புத் தமிழ் மக்களிடம் இருந்தது.

தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு சந்திரிகா செய்ய முடியாததை ரணில் செய்து விடுவார் என்று எவரும் எதிர்பார்க்க ஏது இல்லை. சிங்கள — பௌத்த செல்வாக்கு கொழும்பு அரசுகளின் தலைவிதியை நிர்ணயிக்கும் வரை, தெற்கின் பிரதான கட்சிகள் மனதால் நினைத்தாலுங்கூட தமிழ் மக்களுக்கு உதவ முடியாது; உதவ மாட்டார்கள். இந்நிலையை மாற்றக் கூடிய துணிச்சல் மிக்க தலைவர் எவரும் தெற்கில் இப்போதும் இல்லை; இனியும் உருவாகுவர் என்று எதிர்பார்க்க முடியாது!

போரையும் நடத்தி அரசியல் தீர்வு முயற்சியையும் மேற்கொள்வதே பொ. ஐ. முன்னணியின் பழைய கொள்கை. நவீன ஆயுதங்களைக் கொண்டு விடுதலைப் புலிகளை அழிப்பதாகக் கூறித் தமிழர்களை இன அழிப்புச் செய்வதும், தமிழ்ப் பிரதேசங்களைச் சிதைத்து விடுவதுமே அந்தக் கொள்கையின் உள்ளடக்கம்; உள்நோக்கம்.

புதிய மொந்தையில் பழைய கள்ளையே ஊற்றி விற்பது போல, வேண்டுமானால் சமாதானத்துக்கான போர் என்ற பெயரை வேறு மினுக்கான வாசகத்துக்கு மாற்றிப் புதிய அரசு தனது உண்மையான நோக்கத்தை அடையும் உபாயத்தைக் கைக் கொள்ளக் கூடும்.

புதிய பிரதமர் ரத்னசிறி விக்கிரமநாயக்கா தேர்தல் காலத்தில் ஆற்றிய உரைகளை இலகுவில் எவரும் மறந்துவிட முடியாது. தேர்தல் பேச்சுத் தானே என்று தட்டிக் கழித்து விடவும் இயலாது. உள்ளத்தில் இருப்பது தானே உதட்டில் வரும்!

ஆகையால், தமிழ் மக்கள் தமது அவலங்களுக்கு ஓரளவேனும் ''ஓய்வு'' கிடைக்கும் என்று கொண்டிருந்த சிறு துளி ''நம்பிக்கை'' இந்தத் தேர்தல் மூலம் நீர்க்குமிழி போல மறைந்து விட்டது; கலைந்து போயிற்று.

மூன்றாவது நாடு ஒன்று, தமிழர்களின் தொடர் துன்பநிலை கண்டு மனிதாபிமானத்துடன் இரக்கப்பட்டு, இலங்கை அரசு மூலம் தனக்குக்கிடைக்கும் சொந்த நலன்களைப் புறந்தள்ளி, தமிழர்களுக்கு நியாயமான தீர்வு ஒன்றை வழங்குமாறு பெரும் அழுத்தம் கொடுத்தால் அன்றி, கொழும்பு அரசிடம் இருந்து ஆக்கபூர்வமாக எதனையும் எதிர்பார்க்க பழைய அனுபவம் இடந்தரவில்லை.

அவ்வாறு தமிழர்களுக்கு உதவக் கூடிய நேர்மையான, தியாக மனப்பான்மை உள்ள நாடு எதுவும் உண்டா? அதனை இனங்கண்டு செயற்படக் கூடிய திறமையும் விவேகமும் உள்ள தலைமைத்துவம் தமிழர்களுக்குத் தேவை அதற்கு ஆதாரமாக விளங்க வேண்டிய ஒற்றுமை உண்டா?

தமிழ் மக்கள் ஆழமாகச் சிந்தித்து, தூர நோக்குடன் செயற்பட வேண்டிய வேளை இது. தவறினால் தொடர்ந்து அழிவுகளையும் அவலங்களையுமே சந்திக்க நேரிடும்.

# விழிக்கு ஒளி கொடுக்கும் வெள்ளைப் பிரம்பு தினம்

இன்று சர்வதேச வெள்ளைப் பிரம்பு தினமாகும். இத்தினத்தையொட்டி உலகெங்கிலும் பல்வேறு விழாக்களும் நிகழ்வுகளும் இடம் பெற்றவண்ணமுள்ளன. இத்தருணத்தில் வெள்ளைப் பிரம்பு தினம் எதற்காக அனுஷ்டிக்கப்பட வேண்டும்? விழா எடுக்குமளவுக்கு இந்த வெள்ளைப் பிரம்பின் முக்கியத்துவந்தான் என்ன? போன்ற வினாக்கள் நம் மனங்களில்எழுவது இயல்பே.

கண் பார்வையற்றவர்கள் சுயமாக வீதியில் நடமாடும் போது ஒரு வெள்ளை நிறப் பிரம்பை அல்லது தடியைத் தம் கையில் கொண்டு செல்வதை நம்மில் பலர் அவதானித்திருக்கக்கூடும். அதுவே வெள்ளைப் பிரம்பாகும். அனேகமாக இவ்வெள்ளைப் பிரம்புகள் நான்கு துண்டுகளாக மடிக்கக் கூடியதாக அமைந்திருக்கும். அடிப்பாகத்தில் சிவப்பு வர்ணத்தைக் கொண்ட வெள்ளைப் பிரம்புகளும் உண்டு.

வெள்ளைப் பிரம்பானது பின்வரும் வகைகளில் முக்கியத்துவம் பெறுகின்றது:-

★ இது கண்பார்வையற்றவர்களைச் சுயமாக இயங்க வைக்கின்றது. அதாவது பார்வையற்றவர் மற்றவர்களின் உதவியின்றி சுயமாக வீதியில் நடமாடுவதற்கு வெள்ளைப் பிரம்பு துணை புரிகின்றது.

★ இது கண்பார்வையற்றவர்களின் அடையாளச் சின்னமாக சர்வதேச ரீதியாகவும் சட்ட ரீதியாகவும் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. அதாவது வெள்ளைப் பிரம்புடன் ஒருவரை உலகத்தின் எந்தப் பாகத்திலும் நாம் காண நேர்ந்தால் அவர் ஒரு கண் பார்வையற்றவர் அல்லது மிகக் குறைந்த கண்பார்வையை உடையவர் என்பதை இலகுவில் புரிந்து கொள்ளவும் அவருக்கு எவ்வித இடையூறுமின்றி நடந்து கொள்ளவும் முடியும்.

★ வெள்ளைப் பிரம்பு, எமது மனிதாபிமான உணர்வைத் தட்டியெழுப்பும் ஒரு சாதனமாகவும் சிற்சில சமயங்களில் விளங்குகின்றது. மேலே குறிப்பிட்டது போல வெள்ளைப் பிரம்பின் உதவியோடு பார்வையற்றவர் வீதியிலே நடமாட முடியும் என்பது உண்மையே. எனினும், சிற்சில சமயங்களில் அவருக்கு ஏனையவர்களின் உதவி தேவைப்படவே செய்கின்றது. சந்தடி மிகுந்த ஒரு வீதியைக் கடப்பதற்கோ, குறிப்பிட்ட ஓர் இடத்தையோ அல்லது கட்டடத்தைக் கண்டு பிடிப்பதற்கோ சில சமயங்களில் பார்வையற்றவரால் முடியாது போகலாம். இது போன்ற சந்தர்ப்பங்களில் அவருக்கு உதவவேண்டியது சக பாதசாரி ஒவ்வொருவரினதும் மனிதாபிமானக் கடமையாகும் — இந்த மனிதாபிமானக் கடமையை நினைவூட்டுகின்ற வலியுறுத்துகின்ற — சாதனமாக வெள்ளைப்பிரம்பு விளங்குகின்றது.

> இன்று சர்வதேச வெள்ளைப் பிரம்பு தினமாகும். அதனை ஒட்டி இக்கட்டுரை வெளியிடப் படுகிறது.

★ வெள்ளைப்பிரம்பானது அதனைத் தாங்கிச் செல்லும் பார்வையற்றவருக்குப் பல்வேறு உரிமைகளை வழங்குகின்றது.

அ) வெள்ளைப்பிரம்பைத் தாங்கிச் செல்லும் ஒருவருக்கு வீதியில் முதலில் நடந்து செல்லும் உரிமை உண்டு.

ஆ) வீதியை முதலில் கடக்கும் உரிமை உண்டு.

இ) எந்த ஒரு பொதுப் போக்குவரத்து வாகனத்தையும் எவ்விடத்திலேனும் மறிக்கவோ, அதில் ஏறிக்கொள்ளவோ உரிமையுண்டு.

### வெள்ளைப் பிரம்பின் உதயம்

வெள்ளைப் பிரம்பை உலகுக்கு அறிமுகப்படுத்திய பெருமை அமெரிக்க லயன்ஸ் கழகமொன்றையே சாரும். அமெரிக்க இலினோய் மாவட்டத்திலுள்ள பியோரியா என்னுமிடத்திலுள்ள லயன்ஸ் கழகத்தின் முயற்சியால் 1931 ஆம் ஆண்டு 'வெள்ளைப் பிரம்பு கண்பார்வையற்றவர்களின் அடையாளச் சின்னம்' எனச் சட்டம் கொண்டு வரப்பட்டது. இதனைத் தொடர்ந்து உலக நாடுகள் ஒவ்வொன்றாய் இவ்வெள்ளைப் பிரம்பை ஏற்றுக் கொள்ளலாயின. 1969 ஆம் ஆண்டு இலங்கையில் நடைபெற்ற அகில உலகப் பார்வையற்றோர் சம்மேளனத்தின் மாநாட்டில் ஆண்டு தோறும் ஒக்ரோபர் 15 ஆம் திகதியை சர்வதேச வெள்ளைப் பிரம்பு தினமாகக் கொண்டாடுவது எனத் தீர்மானிக்கப்பட்டது. இவ் வெள்ளைப் பிரம்பு தினமானது இரு பிரதான நோக்கங்களைக் கொண்டது.

1. வெள்ளைப் பிரம்பு பற்றியும் அதன் சர்வதேச, சட்ட அங்கிகாரம் பற்றியும் பொது மக்களுக்கு எடுத்துக் கூறுவதன் மூலம் அவ்வெள்ளைப் பிரம்போடு வீதியில் செல்லும் பார்வையற்றவர்களுக்குப் பாதுகாப்பைப் பெற்றுக் கொடுத்தல்.

2. கண் பார்வையற்றவர்களின் தகைமைகள், திறமைகள் என்பவற்றை வெளிக்கொணர்வதன் மூலமும் அவர்களுக்கான பல்வேறு நலன் புரித் திட்டங்களை அறிமுகப் படுத்துவதன் மூலமும் அவர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துதல்.

பார்வையிழப்பு ஒருவருக்குப் பல்வேறு காரணங்களால் ஏற்படலாம். பிறப்பிலிருந்தோ, விபத்துக்களாலோ, நோய்களாலோ, போசாக்கின்மையாலோ ஒரு மனிதன் தன் கண் பார்வையை இழந்து போகலாம். இவ்வாறு தன் பார்வையை இழந்துவிட்ட ஒரு மனிதனால் இந்த சமுதாயத்தில் மகிழ்ச்சியாக வாழ முடியவில்லையென்றால்— அவனது நியாயமான மனித உணர்வுகள் மதிக்கப்படவில்லையென்றால் — நாமெல்லாம் நாகரிகம் படைத்த ஒரு சமூகத்தைச் சேர்ந்தவர்கள் என்று சொல்லிக்கொள்வதில் எவ்வித அர்த்தமுமில்லை. இந்த நன்னாளிலே கண் பார்வையற்ற நம் சகோதரர்களைப் பற்றி; சக மனிதர்களைப்பற்றி நாம் ஒவ்வொருவரும் ஒரு கணமேனும் சிந்திப்போமேயானால், அவர்களின் வாழ்வு சிறக்க எம்மாலானவற்றைச் செய்வோம் என்று உறுதியெடுத்துக் கொள்வோமேயானால் அதுவே இந்த நாளின் வெற்றியாக அமையும். சமுதாயம் விழித்துக்கொண்டால் விழிப்புலனற்றோரின் வாழ்வில் நிச்சயமாக ஒளி பிறக்கும்.

லயன்
ஆ. ரவீந்திரன்
நல்லூர் லயன்ஸ் கழகம்

# தமிழ்ப் பெண்களின் கல்விக்கு லீலாவதி இராமநாதன் பேருதவி

## நினைவுதின விழாவில் உரை

நல்லூர் ஒக். 15

தமிழ்ப் பெண்கள் கல்வி, சமய வாழ்வு ஆகியவற்றில் முன்னேறவும் ஏனைய மக்களுக்கு ஈடாக வாழவும் முன்னோடியாக விளங்கியவர் சீமாட்டி லீலா இராமநாதன்

இவ்வாறு யாழ். பல்கலைக் கழக துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம் பிள்ளை தெரிவித்தார்.

யாழ். பல்கலைக்கழகத்தில் லீலாவதி இராமநாதன் நினைவுப் பேருரையை ஒட்டிய தொடக்கவுரையைத் துணைவேந்தர்நிகழ்த்தினார்

அப்போது அவர் மேலும் தெரிவித்ததாவது: —

இராமநாதன் கல்லூரி ஆசிரியர் பயிற்சிக் கல்விக்குப் பெரும் தொண்டாற்றியது, 70, வருடங்களாக அவர் எமது நினைவில் நிற்க இத்தகைய பணிகள் காரணம்.

சேர் பொன். இராமநாதனின் காத்திரமான பணிகளுக்கு அவரது நற்கருமங்களுக்கு துணையாக விளங்கியவர் சீமாட்டி லீலாவதி-

அவரது நினைவுப் பேருரையை நடத்த சிவத்தமிழ்ச் செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி முன்வந்திருப்பது பொருத்தமானதாகும். தமிழ்ச் சமூகத்தின் மங்கையர் திலகமாக, அன்னையாக எமது சமூகத்துக்கு குறிப்பாக சைவத்துக்கும் நண்பன் போன்று பணியாற்றும் அவர் எந்தக் கருமத்தையும் சிறப்பாக முன்னெடுக்கும் ஆற்றல் மிக்கவர்.

எல்லோரதும் நம்பிக்கைக்குரிய நிதிவளத்தைத் திரட்டக்கூடிய ஆற்றல் மிக்கஅவர் தெல்லிப்பழையில் துர்க்காபுரத்தைக் கட்டியெழுப்பி ஆதரவற்ற குழந்தைகளுக்கு அன்னையாக இருந்து அளப்பரிய சேவைகளை நல்கி வருகின்றார்.

சைவ சித்தாந்த பாரம்பரியங்களை இளம் தலைமுறையினரிடம் பரப்பிவரும் அவர் இன்றைய நினைவுப் பேருரையை நிகழ்த்தப் பொருத்தமானவர் — என்றார்.

சிவத்தமிழ்ச் செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி சைவசித்தாந்தம் காட்டும் வாழ்வு நெறி என்னும் பொருளில் சீமாட்டி லீலாவதி இராமநாதன் நினைவுப் பேருரையை நிகழ்த்தினர்.

(இ-111)

## தேசிகருக்கு இன்று அஞ்சலி

யாழ்ப்பாணம், ஒக். 15

மகா வித்துவான் அமரர் இ. நமசிவாய தேசிகருக்கு அஞ்சலி செலுத்தும் நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ். இந்து ஆரம்பப் பாடசாலையில் நடைபெறவுள்ளது.

ஆரிய திராவிட பாஷா பிவிருத்திச் சங்கத்தின் ஆதரவில் இடம்பெறும் மேற்படி நிகழ்வுக்கு மேலதிகமாகாண கல்விப்பணிப்பாளர் கலாநிதி ச. நா. தணிகாசலம்பிள்ளை தலைமை வகிப்பார். பேராசிரியர் அ. சண்முகதாஸ், பண்டிதர் க. சச்சிதானந்தன் வித்துவான் க. சொக்கலிங்கம், பண்டிதர் ம. ந. கடம்பேஸ்வரன் கலைப்பேரரசு ஏ. ரி. பொன்னுத்துரை ஆகியோர் அஞ்சலி உரை நிகழ்த்துவர். புலவர்மணி அ. ஆறுமுகம் கவிதாஞ்சலி செய்வார்

(ஓ)

# மிதிவெடி அபாயத்தால் பாணாவெட்டி பகுதியில் நெல் விதைப்பு இல்லை

சண்டிலிப்பாய், ஒக் 15

மாதகல் பாணாவெட்டி குளத்திற்கு தெற்குப்பகுதியிலும், மேற்குப் பகுதியிலும் மாதகல்—பண்டத்தரிப்பு பிரதான வீதிக்கு சமீபமாகவும் உள்ள சுமார் 800 பரப்பு விஸ்திரணமுள்ள விவசாயக் காணிகளில் மிதிவெடி அபாயம் காரணமாக இம்முறை கால்போக நெல்விதைப்பு நடைபெறவில்லை.

இக்காணிகளிலுள்ள மிதிவெடிகளை அகற்றித்தருமாறு மாதகல் விவசாய சம்மேளனம் பல தடவைகள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடமும், படை உயரதிகாரிகளிடமும் நேரிலும் கடிதமூலமும்வேண்டுகோள் விடுத்திருந்தபோதிலும் இதுவரை மிதிவெடி அகற்றப்படவில்லைஎன்று சம்மேளனத்தின் செயலாளர் பொ. சோமசுந்தரம் தெரிவித்தார்.

இக்காணிகளில் 'மிதிவெடி அபாயம்' என்ற சிவப்பு நிற அறிவித்தல் பலகை நடப்பட்டுள்ளது. காணிகளில் மேய்ச்சலுக்குச் சென்ற பல ஆடு, மாடுகள் மிதிவெடிகளில் சிக்கி காயப்பட்டும் இறந்தும் உள்ளன.

(ஐ-135-86)

## ஓய்வூதிய கொடுப்பனவு

தென்மராட்சி, ஒக். 15

கொடிகாமம் கிராமிய வங்கியில் ஓய்வூதியம் பெறுபவர்களின் இம்மாத ஓய்வூதியக் கொடுப்பனவுகள் நாளையும் நாளை மறுதினமும் நெல்லியடி வதிரிச் சந்திக்கு அருகில் உள்ள கொடிகாமம் ப. நோ. கூ. சங்க கிளை ஒன்றில் வழங்கப்படவுள்ளது.

இத் தினங்களுக்கு பின்னர் இங்கு ஓய்வூதியம் வழங்கப்படமாட்டாது எனவும் அதன்பின்னர் கொடிகாமத்திலேயே சென்று பெற்றுக் கொள்ள வேண்டி ஏற்படும் எனவும் சங்கப் பொதுமுகாமையாளர் ச. யோகராசா தெரிவித்துள்ளார்.

(ஐ-117)

## நாளை

புரட்டாதி 30
திங்கட்கிழமை
திதி: திருதியை
நண்பகல் 12 -05 வரை.
நட்சத்திரம்: கார்த்திகை
முன் இரவு: 8. 47 வரை.
சங்கடஹர சதுர்த்தி
விரதம்
சுபநேரம்: 12.02—01.32
ராகுகாலம்: 7.32— 9 02
(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

## உதய வாக்கு

வாழ்வில் சிறந்த செயல் எது தெரியுமா? தொலைவில் மங்கலாகத் தெரிவதை தொல்லைப்பட்டுப் பார்க்க முயற்சிப்பதன்று; கையில் இருப்பதை உடனடியாகச் செய்து முடிப்பது தான்.

— கார்லைல்

# சின்னஞ்சிறு விளம்பரம்

## ENGLISH TUITION

Retired English teacher coaches Students for O/L Dec. 2000 English with Model Question Papers and Past Papers. Can visit home write C.Rathanam 16/16, Senior Lane, Jaffna. (79471)

## சித்தி விநாயகர் சோதிடம்

சாவகச்சேரியில் இயங்கிய மேற்படி ஜோதிட நிலையம் தற்பொழுது விஸ்வப் பிரம்மஸ்ரீ மா.தங்கவேல், 44/1, யாழ்.வீதி, சிறாம்பியடி எனும் முகவரியில் சந்திக்கலாம். ஜாதகம் கணிக்க, விவாகப் பொருத்தம் பார்க்கப்படும். (79423)

## சித்திரம்

G.C.E. O/L, தரம் 10, 9 மாணவர்களுக்கான சித்திர பாட வகுப்புக்கள் நடைபெறுகின்றன. ஆசிரியர், (செங்குந்த இந்துக் கல்லூரி முன்பாக) செங்குந்தவீதி, திருநெல்வேலி. (79376)

## மணமக்கள் தேவை

யாழ். இந்து குடும்பத்தைச் சேர்ந்த படித்த, அழகிய, அனுஷம் நட்சத்திர, 1963இல் பிறந்த, பெண்ணுக்கும், கொழும்பில் பிரபல வர்த்தக நிலையமொன்றில் தொழில் புரியும் மாத வருமானம் 7500/- உள்ள, 1964இல் பிறந்த பூசம் நட்சத்திர, ஆணுக்கும் படித்த அழகிய நற்பண்புள்ள மணமக்கள் தேவை. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:- க.பொன்னையா, மூளாய் கிழக்கு, சுழிபுரம். (79417)

## DISSERTATION BINDING

பல்கலைக்கழக மாணவர்களின் ஆய்வுக் கட்டுரைகள், பல்கலைக்கழக நடைமுறைகளுக்கு அமையக் கட்டிக் கொடுக்கப்படும். (இரு பிரதிகள் கட்டுவதற்கான கட்டணம் ரூபா 350/-). தொடர்பு: பாரதி, 430, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி. 3081. (C/13122)

## விற்பனைக்கு

பாவனையில் உள்ள Canon Fax- 121 உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: S.கந்தசாமி, கரைப்பிட்டி பிள்ளையார் கோயில் பின்வீதி, அராலி தெற்கு, வட்டுக்கோட்டை. T.P. - 070-212369. (79441)

தூய இன டோமன் பெண்நாய், மற்றும் 'கொக்கற்றில்' இன, Love Birds விற்பனைக்குண்டு. தொடர்பு 169, மருத்துவபீடம் முன்பாக, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி. (79435)

புதிதாக முதிரை மரத்தில் செய்த கதவு, நிலை, யன்னல், கிறில் இத்துடன் வீட்டுத் தளபாடங்களும், யமகா மேற்-90 மோட்டார் சைக்கிளும் விற்பனைக்குண்டு. தொடர்பு: 62, இராசவீதி, கல்வியங்காடு, நல்லூர். (79478)

## தென்னங்கன்றுகள்

திறம் செவ்விளநீர் தென்னங் கன்றுகள் மலிவு விலையில் விற்பனைக்குண்டு. தொடர்பு: சிவானந்தம், (ஓய்வு பெற்ற தபாலதிபர்), வரியப்புலம், சுன்னாகம். (79439)

## தவறிவிட்டது

கட்டுடை, மானிப்பாய் எனும் முகவரியுடைய தம்பிராசா சிவசுப்பிரமணியம் (ஆசிரியர், சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி) என்பவருடைய மூக்குக் கண்ணாடி 10.10.2000 அன்று கச்சேரிக்கு முன்பாக உள்ள பஸ் தரிப்பு நிலையத்தில் தவறி விட்டது. கண்டெடுத்தவர்கள் மேற்படி விலாசத்தில் ஒப்படைத்து உதவவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (79465)

நீர்வேலி தெற்கைச் சேர்ந்த அட்புத்துரை மீனாம்பிகை ஆகிய எனது தேசிய அடையாள அட்டையும் (இல.507370349v), விசேட அடையாள அட்டையும் (இல.0903012802) அச்சுவேலி பஸ்நிலையத்தில் 08.10.2000 அன்று தவறி விட்டன. கண்டெடுத்தவர்கள் யாராயினும் கோப்பாய் பிரதேச செயலகத்துக்கு முன்பாகவுள்ள ஜெகா தொலைத் தொடர்பு நிலையத்தில் ஒப்படைக்கப்படின் தகுந்த சன்மானம் வழங்கப்படும். (79453)

## இறைச்சிக்கோழிகள் விற்பனை

Broiler இறைச்சிக் கோழிகள் சுத்தம் செய்து (பாதிக் கோழி உட்பட) பெற்றுக் கொள்ளலாம். இன்று விசேட சேவை, 19,முருகேசர் ஒழுங்கை, (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு), முத்திரைச் சந்தையடி, நல்லூர். (79454)

## நாய்க்குட்டி விற்பனை

21/2 மாதம் நிரம்பிய ஒரு Dobermann Pincher நாய்க்குட்டி விற்பனைக்குண்டு. தனபாலசிங்கம், 19, முருகேசர் ஒழுங்கை (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு), முத்திரைச் சந்தையடி, நல்லூர். (79455)

## இலவசம்

கந்தஷஷ்டி கவசம் நூல் இலவசமாகப் பெற்றுக் கொள்ளலாம். விரும்பியவர்கள் தபால் தலையுடன் கூடிய உறை அனுப்பியும் பெற முடியும். தொடர்பு: ராஜமாதங்கன் ஏட்டுக் களஞ்சியம், மானிப்பாய்வீதி, (பரராஜசேகரப் பிள்ளையார் கோயிலடி), இணுவில். (79468)

# தேர்தலின் பின்னர் 36 வன்செயல்கள்

கொழும்பு,ஒக்.15

நாடாளுமன்றத் தேர்தல் முடிவடைந்த பின்னர் நேற்று முன்தினம் காலை 6மணிவரை 36 வன்செயல்கள் தொடர்பாக முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என்று பொலீஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

ஐ.தே.கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரான ரவி கருணநாயக்காவின் வெலிக்கடையில் உள்ள அலுவலகம் மீது வியாழன் இரவு 12.30 மணியளவில் துப்பாக்கிப் பிரயோகமும், குண்டு வீச்சும் இடம்பெற்றுள்ளன என்றும் - அந்தச் சம்பவமே மிக மோசமான சம்பவம் என்றும்-தெரிவிக்கப்பட்டது. (இ-3)

# சந்தைக் கடைகள் திறந்து வைப்பு

யாழ்ப்பாணம்.ஒக்.15

சுழிபுரம் சத்திய காட்டுச் சந்தையில் உள்ள 4 கடைகள் அண்மையில் புனரமைப்புச் செய்யப்பட்டு திறந்து வைக்கப்பட்டுள்ளன.

ஈ.பி.டி.பியின் வட்டுக்கோட்டைத் தொகுதி அமைப்பாளரும், வலி.மேற்குப் பிரதேசசபைத் தலைவருமான ந.திரிலோகநாதன்.

மேற்படி கட்டடத் தொகுதியைத் திறந்து வைத்தார். (இ-7)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

மலர்வு 18 - 10 - 1939



உதிர்வு 12 - 09 - 2000

அமரர்

**டாக்டர் சுப்பிரமணியம் தியாகராஜா** (D.A.M)

மருத்துவப் பணியில் நிலைத்து நீடு
அருமருந்தாய் எமக்கெல்லாம் வழி
குருவாய்க் காட்டிய எம் தந்தையே: நாம்
அருளிழந்தோம்: பிரிந்தாலும் பிரியுமா நும் நினைவு!

இன்று (15.10.2000) ஞாயிற்றுக்கிழமை பகல் 11.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகளிலும் மதிய போசனத்திலும் பங்குபற்றிச் சிறப்பிக்கும வண்ணம் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**- குடும்பத்தினர்.**

*வடலியடைப்பு,*
*பண்டத்தரிப்பு.*

(79443)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி



அமரர்

**ஆறுமுகம் இராசதுரை**

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 22-06-1917 | 14-09-2000 |

**பாசத்தின் திருவுருவாய் பண்பின் உறைவிடமாய்**
**எம்க்கெல்லாம் வழிகாட்டியாய் இருந்த ஐயாவே!**
**எங்களை விட்டு எங்கே சென்றீர்கள்?**
**நாள்கள் முப்பத்தி ஒன்று சென்றாலும்**
**உங்களின் பிரிவுத்துயர் எங்களை விட்டு அகலாது.**

***உங்களின் ஆத்ம சாந்திக்காக அம்பாளைப் பிரார்த்திக்கின்றோம்.***

**மனைவி, பிள்ளைகள்,**
**மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

*சுதுமலை வடக்கு,*
*மானிப்பாய்.*

(79474)

# 9ஆம் ஆண்டு நினைவலைகள்



**திருமதி சிவகௌரி ஜெகதீஸ்வரன்**

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 27 - 04 -1962 | 15 - 10 -1991 |

**நீங்கள் மறைந்து ஒன்பது ஆண்டுகள்**
**மறைந்து விட்டன ஆனால் உங்களை**
**மறந்து ஒன்பது நிமிடங்கள் கூட**
**எம்மால் இருக்க முடியவில்லையே!**

கண்ணீருடன்
**ஜெகதீஸ்வரன்** (கணவன்),
**டயானா, சாரா** (பிள்ளைகள்).

சுதாஸ் கிறீம் ஹவுஸ்,
றியோ குடும்பம்,
*448, 450 பருத்தித்துறை றோட்,*
*நல்லூர்,*
*யாழ்ப்பாணம்.*

(79400)

# 61 ஆம் நாள் நினைவஞ்சலி



**அமரர் கணபதி சேனாபதி**

| மண்ணுலகில் | விண்ணுலகில் |
|---|---|
| 02-08-1927 | 17-08-2000 |

**பாசத்தின் உறைவிடமாய்**
**பண்பின் செல்வனாய்**
**குலவிளக்காய் மிளிர்ந்த - உனை**
**அறுபத்தோராம் நாளில்**
**நினைவு கூருகின்றோம்.**

மேலும் இன்று (15-10-2000) ஞாயிற்றுக்கிழமை நடைபெறும் வீட்டுக்கிருத்திய நிகழ்விலும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கேட்டுக் கொள்கின்றோம்.

மனைவி - **ஜானகி**
சகோதரி - **பொன்னம்மா**
**சரஸ்வதி - செல்வரட்ணம்**
**புவனேஸ்வரி - ஜெனநாயகரட்ணம்**
**மங்களேஸ்வரி - தங்கேஸ்வரன்**
**ஞானகுணேஸ்வரி - பூபாலச்சந்திரன்**
**இராஜேஸ்வரி - பரன்** (பவுணன்)
(மக்கள்)
**மைத்துனர்மார்**
காலஞ்சென்ற **நாகரத்தினம்**
**குணரட்ணம்**
**சிந்தாமணி**

*"ஜானகி இல்லம்"*
*சீராளன் வீதி,*
*நாவலடி,*
*இமையாணன் மேற்கு,*
*உடுப்பிட்டி.*

தகவல்:
ஸ்ரீவேந்தன்

(79456)

## பாராட்டி வாழ்த்துகிறோம்

**திரு. சி. திசவீரசிங்கம் J. P**
(சிவனடியார்)
(ஓய்வுபெற்ற ஆசிரியர் — சுதுமலை)

அவர்கள் 09 -10 -2000 அன்று மல்லாகம் நீதிமன்றில் சமாதான நீதிவானாகச் சத்தியப் பிரமாணம் செய்து கொண்டதைப் பாராட்டுவதுடன், அவரது சேவை தொடர வாழ்த்துகிறோம்.

— நண்பர்கள்

(சி/13391)

## கொக்குவில் இந்துக் கல்லூரி
## தரம் 6 அனுமதி 2001

மேற்படி வகுப்புக்கு மாணவர்களை அனுமதிப்பதற்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பப் படிவங்களை அலுவலகத்தில் நேரடியாகப் பெற்று விண்ணப்பித்தல் வேண்டும்.

விண்ணப்ப முடிவு திகதி; 30 - 10 - 2000

— அதிபர்

(79481)

## இன்று சர்வதேச
## "வெள்ளைப் பிரம்பு" தினம்
## 15 - 10 - 2000

இந்நன்னாளில்

## வாழ்வகத்தின்
## வாழ்த்து மடல்

விழிக் குறைக்கு உற்ற நண்பன்
"வெள்ளைப் பிரம்பு"
இதனை அறிமுகப்படுத்தி, வருடந்தோறும்
இத்தினத்திற்கு முக்கியத்துவம் வழங்கி வரும்
**அரிமாக் கழகத்தினருக்கு**
எமது மனம் கனிந்த நன்றி.

இந்நன்னாளில் பாரிலுள்ள எம் போன்ற விழிப்புலன் வலுவிழந்த சோதரர் அனைவரும் பல்கலையுடன் நீண்ட செல்வத்தைப் பெற்று, பல்லாண்டு வாழ வாழ்த்துகின்றோம்.

விழிக்குத்துணை வெள்ளைப் பிரம்பே
வழிக்குத்துணை வெள்ளைப் பிரம்பே
எமது சின்னம் வெள்ளைப் பிரம்பே
எழுந்து வாழி வெள்ளைப் பிரம்பே!

இத்தினத்தில் அனைவரும் 'வெள்ளைப் பிரம்பு'க்கு கைகொடுக்க முன்வருவோமாக!

**விழிப்புல வலுவிழந்தோர் வாழ்வகம்**
மானிப்பாய்.

(சி/13379)

## 8 ஆம் ஆண்டு நினைவலைகள்

15 - 10 - 2000



அமரர்

## பொன்னுத்துரை செல்வரத்தினம்

(ஓய்வு பெற்ற கூட்டுறவுப் பரிசோதகர், செயலாளர், யாழ்ப்பாணம் தேசிய கூட்டுறவு சபை, தலைவர், மறுமலர்ச்சி மன்றம்.)

ஆண்டுகள் பல சென்றாலும்
நீங்காத நினைவாக எங்கள் மனதில்
குடி கொண்டுள்ளீர்!

தங்கள் நினைவில் என்றும் வாழும்
அன்பு மனைவி
**திருமதி செல்வரத்தினம்.**

மன்றம்,
லோட்டஸ் றோட்,
மானிப்பாய். (79473)

## காரைநகரில் திருட்டு

காரைநகர், ஒக். 15

இரவுவேளை இனந்தெரியாதவர்களினால் கடை ஒன்று உடைக்கப்பட்டு பொருள்கள் திருடப்பட்டன.

கடந்த புதன்கிழமை இரவு ஊரடங்குச் சட்டம் அமுலில் இருந்தவேளை காரைநகர் புதுநோட்டுச் சந்தியில் இந்தச் சம்பவம் இடம் பெற்றது.

திருடர்கள் முன்பக்கக் கதவை உடைத்து புடைவைகள், குடைகள், சிகரெட்டுகள் உட்பட 25 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருள்களை எடுத்துச் சென்றுள்ளனர்.

இது தொடர்பாக ஊர்காவற்றுறை பொலீஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

அதே சமயம் — கடந்த திங்கட்கிழமை இரவு காரைநகர் புதுநோட்டுச் சந்தியில் உள்ள மதுபானக் கடை ஒன்றும் உடைக்கப்பட்டு சாராயப் போத்தல்கள் திருடப்பட்டிருந்தன. (இ-73)

## கருத்தரங்கு

சண்டிலிப்பாய், ஒக். 15

சண்டிப்பாய் பிரதேச செயலகம் நடத்தும் தாய்மாருக்கான போஷாக்கு கல்வி விழிப்புணர்ச்சி கருத்தரங்கு மாதகல் மயில்வாகனப் புலவர் சனசமூகநிலைய மண்டபத்தில் நாளை திங்கட்கிழமை முற்பகல் 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

சண்டிலிப்பாய்ப் பிரதேச செயலர் நா. வேதநாயகன் தலைமையில் நடைபெறும் இக் கருத்தரங்கில் மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் கே. கணேஸ்வரராஜா "கர்ப்ப காலத்திலும் பாலூட்டும் போதும் எடுக்கவேண்டிய உணவும் பராமரிப்பும், குடும்ப திட்டமிடுதலும்" என்ற விடயம் பற்றி உரை நிகழ்த்துவார்.

குடும்ப சுகாதார சேவை உத்தியோகத்தர்கள் திருமதி எஸ். இராசையா, திருமதி பி. துரைசாமி ஆகியோரும் இதில் கலந்து கொண்டு உரைநிகழ்த்துவார்கள் என்று தெரிவிக்கப்பட்டது. (இ-135)

## சேவை நலன் பாராட்டும் பிரியாவிடையும்

காரைநகர், ஒக் 15

வடபிராந்திய போக்குவரத்துச் சபை காரைநகர் சாலை முகாமையாளராகக் கடமையாற்றி கடந்த 6 ஆம் திகதி ஓய்வுபெற்ற என். ஆர். தனரத்தினம் அவர்களுக்கான சேவை நலன் பாராட்டும் பிரியாவிடையும் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணிக்கு காரைநகர் சாலையில் நடைபெறும்.

காரைநகர் சாலை நடத்துனர் கே. சீ. கந்தசாமி தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வடபிராந்திய போக்குவரத்துச் சபை முகாமையாளர் வி எஸ். சொக்கலிங்கம் கலந்து கொள்வார்.

(இ-73)

## புதிய கற்கை நெறிகள்

யாழ்ப்பாணம், ஒக. 15

யாழ். உயர் தொழில்நுட்ப நிறுவனத்தில் அடுத்த ஆண்டு ஆரம்பத்தில் புதிதாக இரண்டு கற்கைநெறிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

மனைப் பொருளியல் மற்றும் செயலாளத்துவப் பயிற்சி ஆகிய கற்கைநெறிகளை ஆரம்பிப்பதற்கு உரிய அனுமதியைக் கோரி பணிப்பாளர் நாயகத்துக்கு விண்ணப்பித்துள்ளதாகவும் —

அதற்கான அனுமதி கிடைத்ததும் இரண்டு கற்கை நெறிகளும் ஆரம்பிக்கப்படும் என்றும் உயர்தொழில் நுட்ப நிறுவனத்தின் இயக்குநர் தெரிவித்தார். (இ-10-ரி)

## வாழ்த்துகின்றோம்

யாழ் சென். ஜோன்ஸ் அம்புலன்ஸ் படைப் பிரிவின் உதவி மாவட்ட ஆணையாளராகச் சிறந்த பணியாற்றிய

**திரு. க. அருந்தவராஜா** அவர்கள்
மத்திய பிரதேச மாவட்ட ஆணையாளராக

பதவி உயர்வு பெற்றதையிட்டு இவரது பணி மேன்மேலும் சிறக்க வேண்டும் என வாழ்த்துகின்றோம்.

சென். ஜோன்ஸ் சேவையிலுள்ள
சி. ஹரிகரன் (C S.),
சி. சிவயோகப் பிரியா (C.S.O.),
இ. தவசீலன் (C S O.),
க. பிரதாபன் (C S.O.).

(79469)

## முக்கிய அறிவித்தல்

ஓடக்கரை ச. ச. நிலையத்தால் இன்று 15-10-2000 அதிர்ஷ்டம் பார்க்கவிருந்த அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு தவிர்க்கமுடியாத காரணத்தால் பிற்போடப்பட்டுள்ளது. எதிர்வரும் தைப்பொங்கல் தினத்தில் அதிர்ஷ்டம் பார்க்கப்படும்.

செயலாளர்,
ஓடக்கரை ச. ச. நிலையம்.

கல்லூரி வீதி,
பருத்தித்துறை.

(79489)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

யா/ பண்ணாகம்
மெய்கண்டான் மகாவித்தியாலயத்தைச் சேர்ந்த
**செல்வன் செல்வநாயகம் உமாசங்கர்**

5 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்ததையிட்டு அவரைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

— நலன்விரும்பிகள்

சுழிபுரம். (79492)

## உடன் தேவை

யாழ்ப்பாணம் அரசினர் மருத்துவமனைக்கு முன்பாக உள்ள மருந்தகத்திற்கு (பார்மசிக்கு) ஆங்கில மருந்து வியாபாரத்தில் ஒரு வருடத்திற்கு மேல் அனுபவமுள்ள பெண் விற்பனையாளர்கள் தேவை. நல்ல சம்பளம் வழங்கப்படும்.

விண்ணப்ப முடிவு திகதி:- 22-10-2000
பயிலுநர்களும் விண்ணப்பிக்கலாம்.

**வசந்தம் பார்மசி**
456, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

(79482)

## கண்ணீர் அஞ்சலி

வலிகாமம் மேற்கு செஞ்சிலுவைச் சங்கத்தின் நீண்டகால நிர்வாக சபை உறுப்பினரும், தொண்டர் சேவைப் பொறுப்பாளருமாகிய

திரு. ந. சபாரத்தினசிங்கி
அவர்களது அன்புத் தந்தையார்

**செல்லத்துரை நடராசா**

அவர்களது மறைவையிட்டு எமது கண்ணீர் அஞ்சலிகளைச் செலுத்துவதுடன் அன்னாரது ஆத்மா சாந்தியடையவும் பிரார்த்தித்துக் கொள்ளுகின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்,
வலி.மேற்குப் பிரிவு

சரவடி, வட்டுக்கோட்டை. (79487)

யா/ஆனைப்பந்தி மெ. மிஷன் வித்தியாலயம்
5 ஆம் தர புலமைப் பரீட்சை - 2000

## வாழ்த்துக்கள்

| | | |
|---|---|---|
| 1. | கு. யோகானந்தி | — 168 |
| 2. | க. வேணுகோபால் | — 153 |
| 3. | வி. தீபிகா | — 151 |
| 4. | ச. பிரணவன் | — 146 |
| 5. | கே. கௌசிகா | — 145 |
| 6. | த. லக்சிகா | — 143 |
| 7. | இ. பிரசன்னா | — 141 |

சித்தியடைந்த, வெட்டுப்புள்ளியை அண்மித்த மாணவர்களையும், பயிற்றுவித்த ஆசிரியர் குழாத்தையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

பா. அபிவிருத்திச் சங்கம்.
யா/ஆனைப்பந்தி, மெ. மி. வி.

(79476)

## ஜோய் ரெக்ஸ்& குறஸ் ரெயிலறிங்

52/1, 89, கண்டி வீதி, சுண்டுக்குளி என்னும் முகவரியில் இயங்கி வந்த மேற்படி ஸ்தாபனம் வாடிக்கையாளரின் நன்மை கருதி தமது சேவையை சம்பியன் லேன், கே.கே.எஸ்.வீதி, கொக்குவில் என்னும் முகவரியில் ஆரம்பித்துள்ளது. வாடிக்கையாளர்களை அன்புடன் அழைக்கின்றோம்.

– நிர்வாகி

(79370)

## 90 ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம் 30 — 01 — 1942

மறைவு 18 — 07 — 2000

### அமரர் வேலுப்பிள்ளை கனகரத்தினம்

(சண்டிலிப்பாய் பிரதேச செயலக திட்டமிடல் பணிப்பாளர்)

அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டிப் பிரார்த்திக்கின்றோம்.

மனைவி, மகள்,
உறவினர், நண்பர்கள்.

செல்வகிரி,
மானிப்பாய் வீதி,
ஆனைக்கோட்டை.

(79472)

## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி அன்னம்மா சபா. ஆனந்தர்

தோற்றம் 01 - 04 - 1920

மறைவு 17 - 10 - 1997

திதி: துதியை 15-10-2000 ஞாயிற்றுக்கிழமை

''ஆண்டாண்டு தோறும் அழுது புரண்டாலும்
மாண்டார் வருவரோ இம்மாநிலத்தே!''

தங்கள் ஆத்மசாந்திப் பிரார்த்தனையில் நீங்கள் எம்மை வாழ்நாள் முழுவதும் இறையருளோடு ஆசிகூறி வழி நடத்தும் வண்ணம் பிரார்த்திக்கின்றோம்.

ஆசி வேண்டி நிற்கும்

மகள்: திருமதி அருந்ததி ஆனந்தகௌரி
தேவராசா,
மகன்மார், மருமக்கள், பேரர்கள்
உற்றார், உறவினர்.

''ஸ்ரீசாலினி''
காங்கேசன்துறை வீதி,
இணுவில்
தொலைபேசி: 070 212367

(79430)

## புகையிலை நாற்றுமேடை அமைப்பு

வடமராட்சி, ஒக். 15

கடந்த சில தினங்களாகப் பெய்த மழையை அடுத்து வடமராட்சிப் பகுதியில் புகையிலை நாற்றுமேடைகளை அமைப்பதில் விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர்.

புலோலி, திக்கம், கரணவாய் ஆகிய இடங்களில் மிகக் கூடுதலான புகையிலை நாற்று மேடைகள் அமைக்கப்பட்டு வருகின்றன.

(ஐ-173)

## குமணவில்

யாழ்ப்பாணம், ஒக். 15

'குமண' கப்பலில் ஆயிரத்து 600 மெற்றிக் தொன் சீனி உட்பட பல அத்தியாவசியப் பொருள்கள் எடுத்து வரப்பட்டுள்ளதாக யாழ். செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

தற்பொழுது பருத்தித்துறை துறைமுகத்துக்கு வந்து சேர்ந்துள்ள இக்கப்பலில் யாழ். செயலகம் மற்றும் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்துக்கு சீனி எடுத்து வரப்பட்டுள்ளது. யாழ். செயலகத்துக்கு 100 மெற்றிக் தொன் பால் மாவும் எடுத்து வரப்பட்டுள்ளது.

'யுனிசெவ்' நிறுவனத்துக்கு பிளாஸ்ரிக் வாளிகள் மற்றும் பிளாஸ்ரிக் பாய்களும் கைதடி ப. நோ. கூ. சங்கத்துக்கு உழவு இயந்திரம் ஒன்றும் இக் இக்கப்பலில் எடுத்து வரப்பட்டுள்ளது.

(ஜ-5)

## சிறுவர் பூங்கா

வலி. வடக்கு, ஒக. 15

அளவெட்டி கிழக்கு கும்பலை என்னும் இடத்தில் ஜேர்மன் தொழில் நுட்ப நிறுவனத்தின் உதவியுடன் சிறுவர் பூவகா திறந்து வைக்கப்பட்டுள்ளது.

(இ-86)

## உதைபந்தாட்டம்

வலி. வடக்கு, ஒக். 15

வலிகாமம் கல்வி வலயத்துக்கு உட்பட்ட கோட்டங்களிடையே தெரிவு செய்யப்பட்ட பாடசாலை அணிகளிடையேயான உதைபந்தாட்டப் போட்டியில் நாளை திங்கட்கிழமை சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி மைதானத்தில் நடைபெறும் போட்டிகளில் கலந்து கொள்ளும் அணிகள் வருமாறு:

**16 வயதுப் பிரிவு**

★ யூனியன் கல்லூரி எதிர் சுன்னாகம் சைவ மகாஜன வித்தியாலயம்.

**18 வயதுப் பிரிவு**

★ வட்டுக்கோட்டை மத்திய கல்லூரி எதிர் இளவாலை புனிதஹென்றியரசர் கல்லூரி.

★ யூனியன் கல்லூரி எதிர் சுன்னாகம் மயிலணி சைவ மகாஜன வித்தியாலயம்.

(இ-86)

★ ★ ★

வலி. வடக்கு, ஒக். 15

வலிகாமம் கல்வி வலயத்துக்கு உட்பட்ட கோட்டங்களிடையே தெரிவு செய்யப்பட்ட பாடசாலை அணிகளிடையேயான உதைபந்தாட்டப் போட்டியில் நாளை திங்கட்கிழமை மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில்நடைபெறவுள்ள போட்டிகள் வருமாறு:-

**16 வயதுப் பிரிவு**

★ சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி எதிர் வயாவிளான் மத்திய மகா வித்தியாலயம்.

★ சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி எதிர் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி.

**18 வயதுப் பிரிவு**

★ சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி எதிர் மல்லாகம் மகாவித்தியாலயம்.

(இ—86)

யா/ எழுதுமட்டுவாழ் அ. த. க. பாடசாலை

## O/L மாணவர், ஆசிரியர் கவனத்திற்கு

18-10-2000 அன்று 1: 30 மணிக்கு சங்கீதம், விவசாயப் பாடசெய்முறைப் பரீட்சை நடைபெறவுள்ளது. மாணவர், ஆசிரியர் உரிய ஆவணங்களுடன் சமுகம் கொடுக்கவும்.

நடைபெறும் இடம்:-

யா/நெல்லியடி, ம. ம. வி.
நெல்லியடி.

(79470)

## கண்ணீர் அஞ்சலி

சங்கானை செங்கற்படை மகாதேவப் பிள்ளையார் தேவஸ்தான தர்மகர்த்தாவாகிய

### அமரர் மாதவர் கனகராஜநாயகம்

அவர்களின் திடீர் மறைவை அறிந்து அதிர்ச்சியும் வேதனையும் அடைவதோடு துயருறும் அவரது குடும்பத்தாருக்கு எமது கண்ணீர்ப் பூக்களைக் காணிக்கை ஆக்குகின்றோம்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்.

ஆலயக் குருக்கள்,
குடும்பத்தினர்.

(79475)

## துயர் பகிர்வோம்

11 — 10 — 2000 அன்று காலமான எமது பாடசாலையின் முன்னாள் ஆசிரியரான காலஞ்சென்ற செ நவரத்தினம் அவர்களது அன்புத்தந்தையும், எமது பாடசாலையின் தற்போதைய ஆசிரியரான திருமதி மகேஸ்வரி நவரத்தினத்தின் அன்பு மாமனுமாகிய

அமரர்

### இளையதம்பி செல்லையாவினதும்

எமதுபாடசாலையில் அதிபராகக் கடமையாற்றும் திரு. செ. விநாயகமூர்த்தி அவர்களது (12-10-2000 அன்று காலமான) அன்பு மாமனாகிய

### அமரர் வல்லிபுரம் கந்தையாவினதும்

மரணச்செய்தி கேட்டு ஆழ்ந்த துயருற்றிருப்பதோடு அன்னார்களது பிரிவால் துயருறும் அவர்களது குடும்பத்தவர்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிக்கின்றோம்.

— ஆசிரியர் சமூகம், மாணவர்கள்.
யா / கரந்தன்
இராமுப்பிள்ளை வித்தியாலயம்,
நீர்வேலி.

(சி/13388)

## 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 08 — 08 — 1930

உதிர்வு 15 — 10 — 1998

### அமரர் பொ. அ. பிலிப் அரசரெட்டினம்

(ஓய்வு பெற்ற களஞ்சியப் பொறுப்பாளர்)

கண்ணுக்குள் எமை வைத்து
கண்ணியமாய் வாழவைத்த எம் தெய்வமே!
மண்ணுக்குள் நீர் மறைந்து
ஆண்டு இரண்டு ஆனாலும்
மனதுக்குள் உம் நினைவு
நாள் தோறும் மலர்ந்திடுமே!
எண்ணுக்குள் அடங்காத
துயர் வெள்ளம் கரைபுரண்டு
கண்ணுக்குள் நீராட
வேண்டுகிறோம் ஒரு வரம்
விண்ணுக்குள் இறையடியில்
நின் ஆன்ம சாந்திக்காய்.

தங்கள் பிரிவால் துயருறும்

மனைவி, சகோதரர், ஞானப்புதல்வர், மைத்துனர்கள், பெறாமக்கள், மருமக்கள்.

17. டேவிற் வீதி, யாழ்ப்பாணம். (79434)

# இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாணவே மக்கள் பொ.ஐ.முவுக்கு வாக்களித்தனர்

## பதவியேற்ற பின்னர் பிரதமர் தெரிவிப்பு

கொழும்பு,ஒக்.15

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணவே மக்கள் பொதுமக்கள் ஐக்கிய முன்னணியை மீண்டும் ஆட்சிப் பீடம் ஏற்றியுள்ளனர். யுத்தத்திற்கு முடிவு காண்பதே புதிய அரசாங்கத்தின் பிரதான குறிக்கோள் என்று புதிய அரசாங்கத்தின் பிரதமர் ரத்னசிறி விக்கிரமநாயக்க தெரிவித்துள்ளார்.

பதினோராவது நாடாளுமன்றத்தின் புதிய பிரதமராக நேற்றுமுன்தினம் பதவியேற்ற பின் களனி வித்தியாலங்கார பௌத்த ஆலயத்தில் இடம்பெற்ற மத வைபவங்களில் கலந்துகொண்ட போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இந்த மத வைபவங்களில் பொ.ஐ.மு.அமைச்சர்கள், எம்.பிக்கள் பலர் கலந்துகொண்டனர்.

மத வைபவங்களைத் தொடர்ந்து பிக்குமார்கள் முன்னிலையில் கருத்துத் தெரிவித்த பிரதமர் ரத்னசிறி விக்கிரமநாயக்க, பொ.ஐ.மு.வின் வெற்றியை அமைதியாகக் கொண்டாடுமாறும் பொதுமக்களிடம் கேட்டுக்கொண்டார். நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட புதிய அரசமைப்பு நகல் ரத்தாகிவிட்டது. புதிதாக அரசமைப்பொன்றைக் கொண்டுவரும் போது மகாசங்கத்தினருடன் கலந்துரையாடியே கொண்டு வருவோம் எனவும் அவர் கருத்துத் தெரிவித்துள்ளார்.

அரசமைப்பைத் திருத்துவது தொடர்பாக பல்வேறு யோசனைகள் தெரிவிக்கப்பட்டு வருகின்றன. ஆனால் பிக்குமார்களுடன் கலந்துரையாடியே புதிய அரசமைப்பு நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் எனவும் அவர் அங்கு கூறியுள்ளார்.

(ஐ-4)

# தீர்வுகாணும் அவசியத்தை சிங்களவருக்கு உணர்த்தியது புலிகளின் போராட்டமே!

## ஸ்ரீமாவோ அஞ்சலிக் கூட்டத்தில் சு.க.பிரமுகர்

யாழ்ப்பாணம்,ஒக்.15

எத்தனையோ தமிழ்க் குழுக்கள் ஆயுதமேந்தினாலும் கூட விடுதலைப் புலிகளின் ஆயுதப்போராட்டம் காரணமாகவே தமிழ் மக்களின் பிரச்சினைகள் தீர்க்கப்படவேண்டும் என்ற நிலைப்பாட்டை சிங்கள மக்களும் சிங்கள அரசியல்வாதிகளும் உணர்ந்துள்ளனர்.

இவ்வாறு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் யாழ்.மாவட்ட உறுப்பினரான த.தேவகுலநாயகம் தெரிவித்தார்.

ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவின் மறைவை ஒட்டி ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் யாழ்.கிளைப் பணிமனையில் நேற்று நடைபெற்ற இரங்கல் கூட்டத்தில் உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் உரையாற்றுகையில் கூறியதாவது:-

முன்னாள் பிரதமரான ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவின் ஆட்சிக்காலத்திலேயே யாழ்.மாவட்டத்தில் பல அபிவிருத்தித் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டன. இதனால் இங்குள்ள இளைஞர், யுவதிகள் வேலைவாய்ப்பைப் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்தது. யாழ்.பல்கலைக்கழகம்,துரையப்பா விளையாட்டரங்கு உட்படப் பலவும் இங்கு உருவாவதற்கு வழிவகுத்தவர் மறைந்த ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவேயாவார். அவரது காலத்திலேயே குடாநாட்டில் விவசாயிகளின் வாழ்க்கைத்தரம் உயர்ந்தது. இவ்வாறான ஓர் உயர்ந்த தலைவியின் மறைவினால் இன்று மக்கள் பெரும் துயரமடைந்துள்ளனர். அவரது இறுதிக் கிரியைகள் நடைபெறுகின்ற இன்று நாமும் அவருக்கு எமது கண்ணீர் அஞ்சலியைச் செலுத்துகிறோம் - என்று தெரிவித்தார்.

இந்தக் கூட்டத்தில் எஸ்.சௌந்தரன், எஸ்.அபிமன்னன், எஸ்.சிவஞானம் உட்படப் பலரும் உரை நிகழ்த்தினர். (ஐ-10)

# தீர்மானம் எடுக்கும் அதிகாரத்தை பேரியல் அஷ்ரபிடம் வழங்க முடிவு

கொழும்பு,ஒக்.15

தேசிய ஐக்கிய முன்னணியின் அனைத்துத் தீர்மானங்களையும் எடுக்கக்கூடிய அதிகாரத்தை அக்கட்சியின் தலைவியும் மறைந்த அமைச்சர் எம்.எச்.எம். அஷ்ரப்பின் பாரியாருமான பேரியல் அஷ்ரப்புக்கு வழங்க அக்கட்சியின் அதிஉயர் பீடம் ஏகமனதாகத் தீர்மானித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக விடுக்கப்பட்ட செய்திக்குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வந்து நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்தும் பொருட்டே தேசிய ஐக்கிய முன்னணி, நடந்துமுடிந்த தேர்தலில் போட்டியிட்டது. அமைச்சர் அஷ்ரப் தலைமையில் மேற்படி நோக்கத்திற்காக அனைத்து இனமக்களையும் இணைக்கும் முயற்சி மேற்கொள்ளப்பட்டு வந்த வேளையிலேயே அவரது திடீர் மறைவு ஏற்பட்டது.

மறைந்த அமைச்சர் அஷ்ரப்பின் அரசியல் நோக்கத்தை அடையும் முயற்சியில் இருந்து அவரது வழிகாட்டலின் கீழ் அரசியலுக்கு வந்த எவரும் விலகிச் செல்லப்போவதில்லை. அத்துடன், தேர்தலின்போது எமக்கு ஆதரவு கொடுத்த மக்களுக்குச் சேவை செய்ய தேசிய ஐக்கிய முன்னணி கடமைப்பட்டுள்ளது.

அதேநேரம் தேசிய ஐக்கிய முன்னணியின் விடயங்களை முன்னெடுப்பதற்கும், தீர்மானங்களை எடுப்பதற்கும் பூரண அதிகாரத்தை மறைந்த அமைச்சர் அஷ்ரப்பின் பாரியார் பேரியல் அஷ்ரப்பிற்கு வழங்க உயர்பீடம் ஏகமனதாகத் தீர்மானித்துள்ளது - என்று உள்ளது. (ஐ-4)

## ஆங்கில போதனாசிரியர்கள் நியமனம்

யாழ்ப்பாணம்,ஒக்.15

யாழ்.பல்கலைக்கழகத்துக்கு பகுதிநேர ஆங்கில போதனாசிரியர்களாக 18 பேர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இவர்களுள் அனைவரையும் நாளை திங்கட்கிழமை காலை 8.45 மணிக்கு பல்கலைக்கழகத்தில் சமுகமளிக்குமாறு துணைவேந்தர் அறிவித்துள்ளார். (ஐ)

## வன்னியில் வயிற்றோட்டம்

வவுனியா,ஒக்.15

வன்னிப் பகுதியில் குழந்தைகள் வயிற்றோட்டத்தினால் பாதிக்கப்பட்டு வருவதாக அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மல்லாவி வைத்தியசாலையில் கடந்த சில நாள்களில் மட்டும் 16 குழந்தைகள் வயிற்றோட்டம் காரணமாக அனுமதிக்கப்பட்டுள்ளன.

மருந்து தட்டுப்பாட்டினால் வயிற்றோட்டத்திற்கான சிகிச்சையினை வழங்குவதில் பெரும் சிரமம் ஏற்பட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது.

(ஐ-5)

## உருவச்சிலை விரைவில் திறப்பு

சண்டிலிப்பாய்,ஒக்.15

மானிப்பாய் இந்துக் கல்லூரியில் அதன் நிறுவுனரான அமரர் எஸ். சங்கரப்பிள்ளையின் முழு அளவிலான உருவச்சிலை விரைவில் திறந்துவைக்கப்படவுள்ளது.

இந்தச் சிலையை வலிகாமம் கல்வி வலய சித்திரபாட ஆசிரிய ஆலோசகர் துரை வீரசிங்கம் உருவாக்கியுள்ளார்.

இதற்கான நிதியினை மானிப்பாயைச் சேர்ந்தவரும் முன்னாள் மேல் மாகாண சபை ஆளுநருமான டி.எம். சுவாமிநாதன் வழங்கியுள்ளார்.

(ஐ-135)

# வாழ்த்துகின்றோம்

தென்மராட்சி மேற்கு ப.நோ.கூ. சங்கத் தலைவரும்
சமூக சேவையாளருமான
சி.சுப்பிரமணியம் அவர்கள்
சமாதான நீதிவானாக நியமனம்
செய்யப்பட்டதையிட்டு
எமது வாழ்த்துக்களைத்
தெரிவித்துக் கொள்கின்றோம்.

கைதடி தெற்கு ச.ச. நிலையம்.
கைதடி தெற்கு கிராம அபிவிருத்திச் சங்கம்.
கைதடி தெற்கு மின்னொளி நாடக மன்றம்.
அறவழி மழலைகள் கல்விப் பூங்கா - கைதடி தெற்கு.
கைதடி தெற்கு மின்னொளி சிக்கன கடனுதவு கூ.சங்கம்.

(C/13397)

# கண்ணீர் அஞ்சலி

குப்பிளானைச் சேர்ந்த

**திருமதி தில்லையம்பலம் இரஞ்சிதமலர்**

அவர்கள் 14-10-2000 அன்று காலமானார்.

அவரது மரணச் செய்தி கேட்டு அதிர்ச்சியுறும் நாம் அவரது பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய கற்பக விநாயகனைப் பிரார்த்திக்கின்றோம்.

*– பரிபாலன சபையினர்.*

*குப்பிளான் கற்கரை கற்பக விநாயகர் ஆலயம்,*
*குப்பிளான்.*

(C/13400)


மகிழ்ச்சி தரும்!

மகத்தான தீபாவளி மலிவு விற்பனை

10-10-2000 முதல் 26-10-2000 வரை

* தரமான புடைவை வகைகள்
* அதி நவீன டிசைன்கள்
* கண்கவர் வர்ணங்கள்

வாடிக்கையாளருக்கு.... ....விசேட விலைக் கழிவு!

* வாடிக்கையாளர் நன்மை கருதி
15-10-ஞாயிறு, 22-10- ஞாயிறு தினங்களில்
எமது நிறுவனம் திறந்திருக்கும்.

லைடன் புடைவை நிலையம்

T.P: 2381

410, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம். (C/13387)


# பாராட்டி வாழ்த்துகின்றோம்

தென்மராட்சி மேற்கு (கைதடி)ப.நோ.கூ.சங்கத் தலைவரும், யாழ். மாவட்ட கூட்டுறவு கிராமிய வங்கி வங்கிகளின் சமாசம் உட்பட பல கூட்டுறவு அமைப்புகளின் முக்கிய உறுப்பினரும்,
சமுதாய தொண்டருமான

**சி.சுப்பிரமணியம் (ஜே.பி)**

அவர்கள் சமாதான நீதிவானாக நீதி அமைச்சினால் நியமிக்கப்பட்டதனை வாழ்த்தி வரவேற்கிறோம்.

*கைதடி மத்தி வளர்மதி ச.ச.நிலையம்.*
*வளர்மதி விளையாட்டுக் கழகம்.*

கைதடி மத்தி,
கைதடி.

(C/13398)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



2000, ஆண்டு 5 புலமைப் பரிசில் பரீட்சையில்
சித்தியடைந்த மாணவன்

செல்வன் **விநாயகமூர்த்தி (A.V.M.) மிறாஜ்**
**புள்ளி - 152**

இவரை கல்வி கற்பித்த கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலய அதிபர், ஆசிரியர்களுக்கும், தற்காலிகமாகக் கல்வி கற்கும் உடுப்பிட்டி அமெரிக்க மிஷன் பாடசாலை அதிபர், ஆசிரியர்களுக்கும், தனியார் கல்வி நிலைய ஆசிரியை செல்வி பொ.லீலாவதி அவர்களுக்கும் மற்றும் சித்தியடைந்த மாணவர்கள்

**செல்வன் ஜெகநாதன் வினோஷன் ~ 160**
**செல்வன் சின்னத்துரை சோபிதன் ~ 155**

ஆகியோரையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

*A.V.M. போட்டோ கலையகம்,*
*புகையிரத நிலைய வீதி,*
*கொடிகாமம்.*

தற்காலிக முகவரி:
*A.விநாயகமூர்த்தி,*
*A.V.M. போட்டோ,*
*சந்தை வீதி, உடுப்பிட்டி.*

(79484)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்

**செல்வி பாலச்சந்திரன் தர்மினி**

2000ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் பருத்தித்துறை யா/வட இந்து மகளிர் கல்லூரியில் அதி உயர் புள்ளிகள் (166) பெற்று முதல் மாணவியாகத் திகழும் செல்வி பாலச்சந்திரன் தர்மினியைப் பாராட்டி வாழ்த்துவதோடு அவரின் கல்வி வளர்ச்சிக்கு உறுதுணையாக இருந்த கல்லூரி அதிபர், வகுப்பாசிரியர், பெற்றோர் ஆகியோருக்கு எங்கள் மனமார்ந்த நன்றியைத் தெரிவிப்பதோடு மேலும் பல்கலையும் பெற்று சீரும் சிறப்புமாகத் திகழ வாழ்த்துகின்றோம்.

*பெரிய மாமா குடும்பம்,*
*பெரியப்பாமார் குடும்பம்,*
*சின்னமாமா குடும்பம், மாமிமார்.*

*235, வி.எம்.றோட்,*
*பருத்தித்துறை.*

(C/13396)

## புதிய சபா....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் தேசியப் பட்டியலிலும் அவரது பெயர் இடம்பெறவில்லை.

எனினும் தேசியப் பட்டியலில் அவரது பெயரை இணைத்து அவரை சபாநாயகர் பதவிக்கு நிறுத்துவது ஒன்றும் கடினமான காரியமல்ல என்று ஆளும் கட்சியின் சிரேஷ்ட அரசியல்வாதி ஒருவர் கூறியிருப்பதாக கொழும்பு செய்தி வட்டாரங்கள் தெரிவித்தன. தேசியப் பட்டியலில் தனது பெயர் இணைக்கப்படாதது குறித்து லக்ஷ்மன் ஜெயக்கொடி அண்மைக் காலத்தில் அதிருப்தி தெரிவித்து வந்தது குறிப்பிடத்தக்கது. (ஐ-4)

## ஜேர்மனிக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
ருக்கும் இவர்கள் அனைவரும் அடுத்த வாரம் கொழும்புக்குத் திருப்பி அனுப்பப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

தடுத்துவைக்கப்பட்டுள்ள 12 இலங்கைத் தமிழர்களின் பெயர் விவரம் வருமாறு:-

லோகேஸ்வரன் அனுரா (வயது 17), நவரட்ணம் விஜயகுமார், (வயது 21), இராஜரட்ணம் சித்திரலேகா (வயது 29), கனகசபை சுரேஷ்குமார், (வயது 24), நாகராசா தபோதினி (வயது 27), யாக்கோபு பிறேம்குமார் (வயது 22), காசிலிங்கம் கஜன் (வயது 21), அம்பலவாணர் அரவிந்தகுமார் (வயது 34), அருணகிரிநாதர் அகிலா (வயது 23), பொன்னையா நாதன் (வயது 23), பொன்னையா பாலகுமார் (வயது 26), வைரமுத்து யோகாம்பிகை (வயது 26).

அண்மையில் ஜேர்மன் விமான நிலையத்தில் வந்திறங்கிய இவர்கள் அனைவரும் அங்குள்ள தமது உறவினர்களிடம் செல்ல அனுமதிக்கப்படவில்லை.

இவர்களில் பலர் இலங்கையில் நடக்கும் இராணுவ நடவடிக்கைகளில் காயமடைந்தவர்கள் என்றும் அதற்கான சாட்சியங்களை நிரூபித்த போதிலும் அவர்களது புகலிடக் கோரிக்கை நிராகரிக்கப்பட்டதாகவும் பொன்னில் இருந்து வெளியான ஏஜென்சி செய்தி ஒன்று தெரிவித்தது. இந்தப் பன்னிரண்டு பேரில் இலங்கை இராணுவத்தால் பாலியல் வல்லுறவுக்குட்படுத்தப்பட்ட பெண் ஒருவரும் அடங்கியுள்ளதாக வெளிநாட்டுத் தமிழ் வானொலி ஒன்று தெரிவித்தது. (ஐ-5)

## அக்கரைப்பற்று பள்ளிவாசல் முன்பாக
# ஆர்ப்பாட்டம் செய்த முஸ்லிம்கள் பொலீஸாருடன் கைகலப்பு!

மட்டக்களப்பு,ஒக்.15

மட்டக்களப்பு மாவட்டம் - அக்கரைப்பற்றுப் பள்ளிவாசல் முன்பாக ஐ.தே.கட்சிக்கு ஆதரவான முஸ்லிம்களுக்கும், பொலீஸாருக்கும் இடையில் இடம்பெற்ற கைகலப்பு மற்றும் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களில் 10 முஸ்லிம்கள் காயமடைந்தனர்.

நேற்றுமுன்தினம் இரவு 10 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

நேற்றுமுன்தினம் காலை அக்கரைப்பற்றில் வைத்து ஐ.தே.கட்சியின் ஆதரவாளர்கள் சிலர் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆதரவாளர்களால் தாக்கப்பட்டனர் என்றும் -

இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து ஐ.தே.கட்சியின் ஆதரவாளர்கள் நேற்றுமுன்தினமிரவு அக்கரைப்பற்று பள்ளிவாசல் முன்பாகக் கூடி ஆர்ப்பாட்டம் நடத்தினர் எனவும் -

இந்த ஆர்ப்பாட்டத்தை அடக்குவதற்கு வந்த பொலீஸார் ஆர்ப்பாட்டக்காரர்களைக் கலைப்பதற்காக கண்ணீர்ப்புகை மேற்கொண்டபோது அங்கு கைகலப்பு மூண்டதாகவும்- தெரிவிக்கப்படுகிறது.

இந்தச் சம்பவத்தில் காயமடைந்த 10 பேரும் அக்கரைப்பற்று ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுப் பின்னர் மேலதிக சிகிச்சைகளுக்காக நேற்று நண்பகல் மட்டக்களப்பு ஆஸ்பத்திரிக்குக் கொண்டு வரப்பட்டனர்.

இதேவேளை -

இந்தச் சம்பவத்தைத் தொடர்ந்து 25பேர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு அக்கரைப்பற்று பதில் நீதிபதி எம்.காதர் முன்னிலையில் நேற்று ஆஜர் செய்யப்பட்டனர்.

அவர்களைத் தொடர்ந்து 14 தினங்களுக்கு விளக்கமறியலில் வைக்குமாறு நீதிபதி உத்தரவிட்டார். (ஐ-7-5-21)

## வடக்கு - கிழக்கு.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பிரிட்டிஷ் அமைச்சரவையில் தனியான அமைச்சு ஒன்று உள்ளது. அது போன்ற பாணியிலேயே வடக்கு - கிழக்குக்கான தனியான அமைச்சு அமைக்கப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்த அமைச்சுப் பொறுப்பு எவரிடம் ஒப்படைக்கப்படும் என்பது குறித்த தகவல் எதுவும் வெளியாகவில்லை. பெரும்பாலும் ஈ.பி.டி.பி. அமைப்பின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தாவிடம் இந்த அமைச்சுப்பொறுப்பு வழங்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுவதாக விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

வடக்கு புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சுப் பதவி டக்ளஸுக்கு வழங்கப்படலாம் என்று முன்னர் செய்திகள் வெளியாகி இருந்தன.

வடக்கு - கிழக்கு மாகாணத்துக்கு இடைக்கால நிர்வாக சபை ஒன்றை அமைக்குமாறு ஈ.பி.டி.பி. அமைப்பு நீண்டகாலமாக அரசிடம் கோரிவருகிறது. தமிழர் விடுதலைக் கூட்டணி உட்பட தமிழ் அரசியல் கட்சிகள் பலவும் இதற்கு எதிர்ப்புத் தெரிவித்துவருகின்றன.

## மண்டைதீவு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கத் தெரியவருகிறது. எனினும் இது தொடர்பாக பாதுகாப்புத் தரப்புத் தகவல்கள் எதுவும் நேற்றிரவுவரை கிடைக்கவில்லை.

தொடர்ச்சியான குண்டுவெடிப்புச் சத்தங்களால் நகரின் கரையோரப் பகுதிகளில் மக்கள் பதற்றம் அடைந்தனர். கரையோரப் பகுதிகளில் இரவு முழுவதும் படையினர் பரா வெளிச்சக் குண்டுகளை ஏவியபடி இருந்தனர். (ஐ-5-7)

# எம்.பி. பதவிக்காக தலைவர்கள் இழுபறி!

## 'சிஹல உறுமய' கட்சிக்குள் பிளவு?

கொழும்பு,ஒக்.15

சிங்களவர்களின் பாரம்பரியங்களைப் பேணுவதற்காக அமைக்கப்பட்ட 'சிஹல உறுமய' கட்சிக்குள் எம்.பி. பதவி தொடர்பாக அதிகாரப் போட்டியும் இழுபறிகளும் ஏற்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

'சிஹல உறுமய' கட்சிக்கு தேசியப் பட்டியல் மூலம் ஓர் எம்.பி.பதவி கிடைத்திருப்பது தெரிந்ததே. அந்தப் பதவியை ஏற்பது யார் என்பது தொடர்பாக அக்கட்சியின் தலைவர் எஸ்.எல்.குணவர்த்தனாவுக்கும் பொதுச் செயலாளர் சம்பிக்க ரணவக்கவுக்கும் இடையே ஏற்பட்ட இழுபறி உச்சக் கட்டத்தை அடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

எம்.பி. பதவி தனக்கு வழங்கப்படாவிட்டால் கட்சித் தலைவருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்போவதாக பொதுச் செயலாளர் ரணவக்க அறிவித்துள்ளதாகக் கூறப்படுகிறது.

இந்த இருவரும் உட்பட தேர்தலில் போட்டியிட்ட 'சிஹல உறுமய' கட்சி வேட்பாளர்கள் அனைவருமே தோல்வி கண்டனர். தேசிய அளவில் ஒரு லட்சத்து 27 ஆயிரத்து 68 வாக்குகளைப் பெற்றதால் அக்கட்சிக்கு தேசியப் பட்டியல் மூலம் ஓர் எம்.பி. பதவி கிடைத்துள்ளது.

## கணவரின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இந்து, கிறிஸ்தவ, முஸ்லிம் மதத் தலைவர்களும் பௌத்த குருமாரும் இந்த வைபவத்தில் கலந்துகொண்டனர்.

சமய வைபவங்களைத் தொடர்ந்து நல்லடக்க நிகழ்வு இடம்பெற்றது.

இறுதிச் சடங்கில் இந்திய உபஜனாதிபதி கிருஷ்ணகாந்த், சீன உதவிப் பிரதமர் உட்பட பல நாடுகளின் பிரதிநிதிகளும் கொழும்பில் உள்ள வெளிநாட்டு தூதரகங்களின் பிரதிநிதிகளும் கலந்துகொண்டனர்.

பிரதமர் ரத்னசிறி விக்கிரமநாயக்க, எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, ஸ்ரீலங்கா சு.க. பொதுச் செயலாளர் எஸ்.பி. திஸநாயக்க, பொ.ஐ.முன்னணியின் செயலாளர் டி.எம்.ஜெயரட்ண, அமைச்சர் ஆறுமுகம் தொண்டமான், ஈ.பி.டி.பி.அமைப்பின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா, ரவூப் ஹக்கீம் ஆகியோர் உட்பட பலர் இரங்கல் உரை நிகழ்த்தினர். பல்லாயிரக் கணக்கான மக்கள் இறுதி ஊர்வலத்தில் கலந்துகொண்டனர்.

காலஞ்சென்ற முன்னாள் பிரதமருக்கு மரியாதை செலுத்தும் வகையில் 21 பீரங்கி வேட்டுக்கள் தீர்க்கப்பட்டன. (ஐ-5-7-ரி)

## புதுக்குடி.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
67 - வத்திராயன்) ஆகிய நால்வரும் மற்றொரு பெண்ணுமே காயமடைந்தனர்.

குண்டு வீச்சுச் சம்பவத்தினால் அப்பகுதியில் வீடுகள் பலவும் சேதமடைந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

காயமடைந்தவர்கள் மல்லாவி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர். (ஐ-7)

## ஜே.வி.பி.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
வருகிறார்.

அவர் மிகவிரைவில் நாடு திரும்புவார் என்றும் -

ஜே.வி.பியின் தேசியப் பட்டியல் மூலம் அவரை நாடாளுமன்ற உறுப்பினராக நியமிக்க கட்சிக்குள் தீவிரமாக ஆலோசிக்கப்பட்டு வருவதாகவும் -

கட்சியுடன் தொடர்புடைய வட்டாரங்களில் தெரிவிக்கப்படுகிறது.

தேர்தலில் மூன்றாவது பெரிய கட்சியாக உருவெடுத்துள்ள ஜே.வி.பி.சார்பில் இரண்டு தேசியப் பட்டியல் எம்.பிக்கள் உட்பட பத்து எம்.பிக்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

தேசியப்பட்டியல் மூலம் கிடைத்துள்ள இரு இடங்களில் ஒன்றுக்கு கட்சித் தலைவர் சோமவன்சவையும் அடுத்த இடத்துக்கு சிறுபான்மை இனத்தவரான தமிழர் ஒருவரையும் நியமிக்க அக்கட்சியின் அரசியல் பீடம் ஆலோசித்து வருவதாகவும் அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.(ஐ)


**விஜேயின் நேற்றைய ஓடியோ CD வெளியீடுகள்**

இசைப்புயல்
**A.R.ரஹ்மானின்**

* தெனாலி
* பிரியாத வரம் வேண்டும்
* நாக தேவதை
* வானவில்
* ப்ரியமானவளே
* சீஹூமணி ரமாமணி
* இன்னிசை உலாவரும் இன்ப இசைச் சோலை

**விஜேய் றெக்கோடிங் சென்ரர்**

519,பருத்தித்துறை வீதி, நல்லூர். கிளை: பிரதானவீதி, மாவிட்டபுரம். (79501)

**இன்றைய புதிய வீடியோ CD வெளியீடு**

நிழல்கள்ரவி, தேவயாணி
* பாரதி
(பிரதிகள் உடன் பெற்றுக்கொள்ளலாம்)
ஓடியோ CD வெளியீடு
இசைப்புயல் A.R. ரஹ்மானின்
* தெனாலி
S.A.ராஜ்குமாரின்
* பிரியமானவளே.

**விஷ்ணு வீடியோ**
கே.கே.எஸ். றோட், கோண்டாவில். (79502)

**தேவை**

மோட்டோரோலா (070) தொலைபேசியின் உரிமை மாற்றிக்கொடுக்க விரும்புபவர்கள் உடன் தொடர்பு கொள்ளவும்.

S.K.லங்காபதி
புகையிரத வீதி, மல்லாகம்.
T.P-070-212623 (79449)

நாளை ஆரம்பம்...!

**A/L 2001 DAY CLASS**

காலை 8.00 மணி.

**DMI** யாழ்நகர் (C/13334)

**கொழும்பு, வெள்ளவத்தை**
**மயூரபதி ஸ்ரீபத்திரகாளி அம்பாள் ஆலய**
**கும்பாபிஷேக சிறப்புமலர் தொடர்பாக**
**அம்பாள் ஆலயங்களின் தர்மகர்த்தாக்களுக்கு**
**ஒரு வேண்டுகோள்.**

அன்புடையீர்,

* கொழும்பு, வெள்ளவத்தை மயூரபதி ஸ்ரீபத்திரகாளி அம்பாள் ஆலய புனருத்தாரண வேலைகள் நிறைவடைந்து நவம்பர் ஒன்பதாம் திகதி (09.11.2000) கும்பாபிஷேகம் நடைபெறவுள்ளது.
* இக் கும்பாபிஷேகத்தை முன்னிட்டு சக்தி வழிபாடு பற்றிய முழு விவரங்களையும் உள்ளடக்கி மண்டலாபிஷேக நிறைவுதினத்தன்று ஒரு மலரை வெளியிடவுள்ளோம்.
* இம் மலரில் இலங்கை பூராகவும் உள்ள அம்மன் ஆலயங்கள் பற்றிய விவரங்களைத் தொகுக்க உள்ளோம். இத் தொகுப்பில் தங்கள் ஆலயம் பற்றிய விவரங்களையும் சேர்க்க பெரிதும் விரும்புகின்றோம்.
* தயைகூர்ந்து தங்கள் ஆலய வரலாறு, ஆலயத் தொன்மை, சிறப்பம்சங்கள் முதலியவற்றைத் தொகுத்து ஆறுபக்கத்துள் அடங்குமாறு கட்டுரை ஒன்றினை அனுப்பி உதவுமாறு பணிந்து வேண்டுகிறோம்.
* மலர் அச்சிடும் பணிகள் நடந்துகொண்டிருப்பதால் உடனடியாகத் தங்கள் கட்டுரைகளை நவம்பர் 15 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்கவும்.
* அம்மன் ஆலயங்களின் விவரங்கள் அடங்கிய களஞ்சியமாக வெளிவரவிருக்கும் இம்மலரில் தங்களின் ஆலயம் பற்றிய பதிவு அடங்கவேண்டியதன் அவசியம் உணர்ந்து தயைகூர்ந்து முழுமையான ஒத்துழைப்பை நல்குமாறு மீண்டும் வேண்டிக்கொள்கிறோம்.

**கட்டுரைகள் அனுப்ப வேண்டிய முகவரி:-**
**5 A, CAMP BELL PLACE,**
**DEHIWELA.**

வித்துவான்
வசந்தா வைத்தியநாதன்
(மலர்க்குழு சார்பாக)

பொன்.வல்லிபுரம் J.P
தர்மகர்த்தா,
மயூரபதி பத்திரகாளி அம்மன் ஆலயம். (C/13399)

மாபெரும் அதிரடி தள்ளுபடி விற்பனை

**சோதி ரெக்ஸ்ரைல்ஸ்**

பல றெடிமேட் வகைகள்
* சாறிகள் * சூட்டிங் * சேட் (Box சேட்)
* ஸ்கேட்டன்பிளவுஸ் மற்றும்

**4 சாறி 1000/- வுக்கு அதிரடி மலிவு**

1m டயானா பிறின்ட் - 100/-
1m பகோ கொலக்ஷன் - 100/-
1m மகதிற்றா கொலக்ஷன் - 100/- மற்றும்
பலவர்ண டிசைன்களில் துணிவகைகள் 1m - 100/-
இன்னும் பல விசேட கழிவுகள்
* சாறி பிளவுஸ் வகைகள் தெரிவுசெய்ய *

**சோதி ரெக்ஸ்ரைல்ஸ்**

14, நவீன சந்தை - யாழ்ப்பாணம். T.P 021-2139 (79491)

இலவசம்

**கணனிப் பயிற்சி நெறிகள்**

* முதலில் அனுமதி பெறும் 200 நபர்களுக்கு இலவசமாக கற்கை நெறிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன. (ஏனையோருக்கு மிகக் குறைந்த கட்டணம்)
* பாடசாலை செல்லும் மாணவர்கள், பாடசாலை விட்டு இடை விலகியோர், தொழில் புரிவோர் மற்றும் கணனிக் கற்கையில் ஆர்வமுள்ளோர் அனைவரும் இணைந்துகொள்ளலாம். (வயதெல்லை கிடையாது)
* விண்ணப்பப் படிவத்தினையும், பாட அலகுகளையும் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளவும்.
* முந்துங்கள் இச் சலுகை இப் பிரிவுக்கு மட்டுமே!
விண்ணப்ப முடிவு திகதி:- 31.10.2000

Note:- எமது கல்வி நிலையத்தில் ஏற்கனவே பயிற்சிபெறுவோர் அனைவரும் நிலையத்துடன் தொடர்பு கொள்ளவும்.

தொடர்புகளுக்கு:-

**AJAY Computer Institute**

சங்கரப்பிள்ளை வீதி, ஆனைக்கோட்டை, மானிப்பாய். (79480)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிகேசன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 15.10.2000 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.